உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு.

துணர் ௰க. { யுவ, ஆவணி. } மலர் ரு.

க. திருப்பூந்துருத்தி சிவன்கோயில் கல்வெட்டுக்கள் 161
திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள்

உ. கம்பர் பாராட்டிய பழந்தமிழ் நூல்கள் 164
திரு. ஆ. சிவசுப்பிரமணியன் அவர்கள்

ந. வரருசி கதை 173
திரு. R. பொன்னுசாமி பிள்ளை அவர்கள்

ச. நயனநூல் நவநீதம் 179
திரு. Dr. S. அமிர்தலிங்கம் பிள்ளை அவர்கள்

ரு. கருதலளவைப் பகுதி 185
திரு. த. இராமநாத பிள்ளையவர்கள்

சு. சகுந்தலை கதை 193
திரு. கோ. வைத்தியலிங்கம் பிள்ளையவர்கள்

எ. மதிப்புரை 199

அ. குறிப்பு 200

கூ. நன்கொடை
பொழிற்றொண்டர்.

செந்தமிழ்ப்புரவலர்,
த. வே. உமாமகேசுவரம் பிள்ளை பொழிற்றொண்டர்.

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகம், கரந்தை.

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் யக	யுவ, ஆவணி.	மலர் ரு

உ

திருப்பூந்துருத்தி சிவன்கோயில் கல்வெட்டுக்கள்.

திரு. வை. சுந்தரேச வாண்டையார், ஆசிரியர், திருவையாறு.

திருப்பூந்துருத்தி என்பது தஞ்சாவூர் ஜில்லா தஞ்சாவூர் தாலூகாவிலுள்ள ஒரு சிவத்தலமாகும். இது தஞ்சாவூருக்கு வடக்கே ஆறுமைல் தூரத்திலுள்ள திருக்கண்டியூருக்குமேற்கே, இரண்டு மைல் தூரத்தில் கடுவாயாகிய குடமுருட்டி ஆற்றின் தென்கரையில் இருக்கிறது. இது சைவசமய குரவராகிய திருநாவுக்கரசு நாயனாரால் பாடப்பெற்ற பெருமையும் பழமையும் வாய்ந்தது. இந்நாயனாரால் எடுப்பிக்கப்பெற்ற திருமடத்தின் ஒரு பகுதி இங்கே இன்றும் நின்று நிலவுகின்றது. இங்கே இந்நாயனாரும், திருஞானசம்பந்தப் பெருமானும் (இறுதியாகக் கண்ணுற்று) தம்முள் அளவளாவியிருந்த செய்தி திருத்தொண்டர் புராணத்தால் அறியக்கிடக்கின்றது. எனவே திருஞானசம்பந்தப்பெருமானும் இத்தலத்தைப் பாடியிருத்தல்வேண்டும்.

அப்பாடல்கள் இதுபோது கிடைத்தில. ஒன்பதாந்திருமுறையினை அருளிச்செய்த ஆசிரியர் ஒன்மதின்மருள் ஒருவராகிய காடநம்பி அடிகளுக்குப் பிறப்பிடமாய் விளங்கியதும் இப்பதியேயாகும்.

இவ்வூர்ச் சிவன்கோயிலில் சற்றேறக்குறைய முப்பது கல்வெட்டுக்கள் உள்ளன. அவைகளில், தென் இந்திய கல்வெட்டுப் புத்தகங்களில், இதுகாறும் வெளிவராத இரண்டை, சின்னாட்களுக்கு முன்னர் எழுதி வந்துள்ளேன். வரலாற்று ஆராய்ச்சியாளர்க்குப் பெரிதும் பயன்படும் என்று கருதி, அவைகளை ஈண்டுக் குறிப்பிடலானேன்.

திருவிமானத்தின் மேல்புறம்.

(1) சுவஸ்திஸ்ரீ மதிரைகொண்ட கோப்பரகேசரி வன்மற்கு யாண்டு 30 ஆவது ஆர்க்காட்டு கூற்றத்து

(2) தேவதானம் திருத்துருத்தி மஹாதேவர்க்கு தஞ்சாஊர் கூற்றத்து நெற்குப்பை உடையான் பெருமான்வைத்த ஆடு

(3) 90. இத்தொண்ணூறுங் கொண்டு நிசதம் உழக்கு நெய்யால் இ:வும் பகலும் ஒரு நொந்தா விளக்கு சந்திராதித்

(4) தவல் எரிப்போ மானேம். திருத்துருத்தி மஹா சபையோம். இது பன்மாகேஸ்வர ரக்ஷை.

அர்த்தமண்டபத்தின் தென்புறம்.

(1) சுவஸ்திஸ்ரீ கோப்பரகேசரி பன்மற்கு யாண்டு 3-ஆவது ஆர்க்காட்டு கூற்றத்து தேவதானம் திருத்

(2) துருத்தி மஹாதேவர்க்கு இரவும் பகலும் ஒரு நொந்தாவிளக்கு எரிப்பதுக்கு பரகேசரி வன்மர் தேவியார் சோழமாதே

(3) வியார் தாயார் முளந்தரங் துகையார் வைத்த பொன் முப்பதின் கழஞ்சு. இப்பொன்னின் பலிசையால் சந்திராதித் தவல் ஒரு நொந்

(4) தாவிளக்கு எரிப்போமானோம். திருத்துருத்தி சபையோம். இதுபன் மாஹேஸ்வர ரக்ஷை.

சில குறிப்புக்கள்.

இவ்விரு கல்வெட்டுக்களும் நம்சோழ மண்டலத்தை கி. பி. 907 முதல் கி. பி. 948 வரை ஆட்சி புரிந்த முதற் பராந்தக தேவரது, முப்பதாவது, மூன்றாவது, இராச்சிய ஆண்டுகளில் முறையே பொறிக்கப் பெற்றனவாகும். இவைகள் திருப்பூந் துருத்தி எம்பெருமானுக்கு நந்தா விளக்குகளுக்கு நிபந்தங்கள் விடுத்ததை விளக்குகின்றன. இவைகளில் இவ்வூர் * திருத் துருத்தி என்றே குறிப்பிடப் பட்டிருக்கிறது.

பிற்காலத்துப் பாண்டியன் ஒருவனுடைய கல்வெட்டில் தான், திருப்பூந்துருத்தி என்ற பெயர் காணப்படுகிறது. மேலும் இக்கல்வெட்டுக்களால் இவ்வூர் ஆர்க்காட்டு கூற்றத்தைச் சார்ந்தது என்ற மற்றொரு செய்தியும் புலனாகின்றது.

---

* திருத்துருத்தி என்பது தஞ்சாவூர் ஜில்லா மாயூரந்தாலூகாவிலுள்ள குற்றாலத்திற்குரிய வேறு பெயராகும். இக்குற்றாலத்தையே விக்கிரமன் குற்றாலம் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இங்கே, விக்கிரம சோழீச்சுரம், ஓங்கார ஈச்சுரம், திருத்துருத்தி சிவாலயம், என்ற மூன்று சிவாலயங்கள் உள்ளன. இவைகளுள் விக்கிரம சோழீச்சுரம் என்பது நம் தமிழகத்தை கி. பி. 1120 முதல் கி. பி. 1136 வரை ஆட்சி புரிந்த விக்கிரம சோழனால் எடுப்பிக்கப் பெற்றதாகும். ஓங்கார ஈச்சுரம் என்பது மூன்றாங் குலோத்துங்கனது தளகர்த்தனாகிய, ஜெயதரப் பல்லவ ராயனால் கட்டப்பெற்றதாகும். திருத்துருத்தி சிவாலயம் என்பது தேவாரம் பெற்றதாகும். இது காவிரியின் நடுவில் இருந்ததாக "பொன்னியின் நடுவு தன்னுள் பூம்புனல் பொலிந்து தோன்றும் துன்னிய துருத்தியானை" என்ற திருநாவுக்கரசரது திருவாக்கால் விளங்குகின்றது. இது இதுபொழுது காவிரியின் தென்கரையில் இருக்கின்றது. இத்துருத்தியும், திருப்பூந்துருத்தியும் வேறுபாடில்லாமல் திருத்துருத்தி என்றே மக்களால் வழங்கப்பட்டு வந்துள்ளது என்பது இம்முதற் பராந்தக தேவரது கல்வெட்டுக்களைக் கொண்டு ஊகிக்கற்பாலதாகும்.

ஆயிரத்தளி, ஓதவேலி (ஒம்பத்துவேலி) பெருமங்கலம், பிரம்பில், புதுக்குடி, சந்திரலேகை (செந்தலை) பேர் ஆர்க்காடு, (ஆர்க்காடு) பேராசூர் (அரசூர்) திருக்கண்டியூர் ஆகிய இவ்வூர்கள் இவ்வார்க்காட்டு கூற்றத்தைச் சார்ந்திருந்தனவென்று, தஞ்சை இராச ராசேச்சுரத்திலுள்ள முதல் இராச ராசன் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன.

இவ்வார்க்காடு தஞ்சாவூரிலிருந்து திருவையாற்றுக்குப்போகும் பெருவழியிலுள்ள அம்மன்பேட்டைக்கு மேற்கே முக்கால் மைல் தூரத்தில் வெட்டாற்றின் தென்கரையில் இருக்கின்றது. எட்டுத்தொகை நூற்களுள் ஒன்றாகிய குறுந்தொகையில் குறிப்பிடப் பெற்றுள்ள **அழிசி** என்னும் வள்ளலுக்கு வாழ்விடமாய் விளங்கியது இவ்வூரேயாகும். இவ்வார்க்காட்டின் நெல் வளப்பத்தைக்கூறும் "நோவினிய வாழிய நெஞ்சே" என்று தொடங்கும் நற்றிணைச் செய்யுள் படித்து இன்புறுதற் குரியதாகும்.

நற்றிணை, குறுந்தொகை ஆகிய இந்நூற்களில், இவ்வூர் குறிப்பிடப் பெற்றுள்ளமையால், அந்நூற்கள் தோன்றிய காலமாகிய கடைச்சங்க காலத்தில் இவ்வூர் பெருமையுடன் விளங்கியிருத்தல்வேண்டும். பிற்காலத்துச் சோழ மன்னர்கள் பலரும் ஆர்க்காட்டு கூற்றத்திற்கு இதையே தலைமையாக்க கொண்டிருந்த செய்தி கல்வெட்டுக்களால் புலப்படுகின்றமையால் அச்சோழ மன்னர்கள் காலங்களிலும் இவ்வூர் சிறப்புடன் விளங்கியது ஆதல் வேண்டும். இதுபொழுது இவ்வூர் நெல்வளத்தைத் தவிர வேறொன்றும் பெற்றிலதாய் ஒருசிறு கிராமமாய் விளங்குகின்றது.

கம்பர் பாராட்டிய பழந்தமிழ் நூல்கள்

பண்டித, ஆ. சிவசுப்பிரமணியன்,
உதவித்தமிழாசிரியர்
இராமேசுர தேவத்தான வடமொழிப் பாடசாலை, மதுரை.

முற்றொடர்ச்சி துணர் 11. மலர் 4. பக்கம் 158.

'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்றவழி, அவன் என்னும் சுட்டுப்பெயர், பரம்பொருளை யுணர்த்தினாற்போல, ஈண்டுக் கற்பக மனைய **அக்கவிஞர்** என்ற சுட்டுப் பெயரும் தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரைக் குறித்துநின்றதாகும். என்னை?

கற்பகம்போல உள்ளுநர் உள்ளும் பொருளெல்லாம் உளவாக நூல்செய்தார் அவரையன்றிப் பிறர் யாவரே யுண்டு? ஒருவருமில்லை.

திருவள்ளுவப் பெருந்தகையாரையும், அவர் அருளிய திருக்குறளையும் வியந்து பாராட்டிப் புகழ்ந்து வாழ்த்திய திருவள்ளுவமாலையுள், இறையனுர் அருளிய,

"என்றும் புலரா தியாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதாய்—குன்றாத
சேந்தளிர்க் கற்பகத்தின் தேய்வத் திருமலர்போன்ம்
மன்புலவன் வள்ளுவன் வாய்ச் சோல்"

என்னும் செய்யுளைக் கல்லாதாருளராயின் அவர்க்கு யாம் கூறுவது புதுமையெனத் தோன்றும். திருவள்ளுவர் வாய் மலர்ந்தருளிய நூல் செந்தளிர்க் கற்பக நறுமலர்போல்வது என்பது அச்செய்யுளின் கருத்து.

திருவள்ளுவரைக் கற்பகத்துக்கும் அவர் வாய் மலர்ந்தருளிய நூலைக் கற்பகத்து மலர்ந்த நறுமலர்க்கும் உவமை கூறிச் சிறப்பித்த இறையனுர் வாக்கைத் தாமும் போற்றுவாராய்த் திருவள்ளுவரைக் கற்பக மனைய கவிஞர் எனவந்த கம்பர், அச்சொற்றொடர் பொதுமொழித் தொடராய் வேறு சிலரையும் உளப்படுத்தியதெனக் கொண்டு உலகமலையாமைப் பொருட்டுத் தமக்குவமை தாமேயாகிய திருவள்ளுவனரின் தலைமைப்பாடு இனிது தோன்ற உலகறி சுட்டுக் கொடுத்துக் கற்பகமனைய அக் கவிஞர் எனக் குறித்தார் என்க. தலைமைப்பாடுதோன்ற உலகறி சுட்டுக் கொடுத்துக் கூறுதல் மரபென்பதனை,

"புயலைப் பற்றுமப் பொங்கரி போக்கியோர்
முயலைப் பற்றுவ தென்ன முயற்சியோ?"

என்று வாலி கூற்றிலே கம்பரே கூறியிருத்தல் காண்க. மதம் பொழி வாரணத்தைப் பாய்ந்தடிக்கும் ஆற்றலுடைய தலைமைப் பாட்டால் புயலைப்பற்றும் அப்பொங்கரி எனச் சுட்டும் சிறப்புக் குரியதாகிய பொங்கரியே போல, வேதப்பொருளை விரகால் விரித்துலகோர் ஓதத் தமிழானுரைசெய்த தெய்வப் புலமை

யுடைய தலைமைப்பாட்டால், கற்பகமனைய அக்கவிஞர் எனச் சுட்டும் சிறப்புக் குரியராகிய திருவள்ளுவனாரை அவ்வாறே சுட்டிக் கூறினர் கல்வியிற் பெரியராய கம்பர்!

நாகரிருக்கை ஈதெனக் காட்டும் தெளிவும், அளந்தறிய லாகா ஆழமுமுடைய பம்பைப் பொய்கைக்கு ஓதற்கெளிமை யும், உணர்தற்கருமையு முடைய அக்கவிஞர் நாட்டிய சொற் பொருளையே உவமையாகக் கொண்டது எத்துணைப் பொருத்த முற நிற்கின்றது!

பொய்கையின் தெளிவுடைமைக்கு அக்கவிஞர் நாட்டிய சொல்லின் கண்ணுள்ள ஓதற்கெளிமை யுடைமையும், பொய் கையின் ஆழமுடைமைக்கு அச்சொல்லின் கண்ணுள்ள பொரு ளுணர்தற் கருமையுடைமையும் உவமையாம்.

ஓதற்கெளிதாய் அக்கவிஞர் நாட்டியசொல் உணர்தற் கரிதா மாறென்னை? எனின் அது வேதப்பொருளாய் மிக விளங்குதலே யாம்.

வேதம்போல, என்றும் பொய்யாத மெய்ம்மொழிகொண்டு அழியாது நிற்கும் நூலாகிய அக்காரணத்தாலன்றே, அதனைக் கற்பகமனைய அக்கவிஞர் **நாட்டிய சொல்** என்று வற்புறுத் துணர்த்துவாராயினர். **"நாட்டுதல் — நிலைபெறச் செய்தல்"** என்றார் ஆனுப் புலமைச் **சேனாவரையரும்!**

ஆயின் வேதப்பொருள் உணர்தற்கரியதொன்றோ? எனின், அரியதொன்றே யாம் என்க. அவ்வுண்மையை, "மேவரு முணர்வு முடிவிலாமையினால் வேதமும் ஒக்கும்" என்று கல்வி யிற் பெரியராகிய கம்பர் தாமே கூறுதல் கொண்டு தெளிக. வேதம் பொய்யா மெய்ம்மொழியது என்னும் உண்மையும் அக் கம்பரே கூறிய, "வெல்வதும்பாவமோ? வேதம்பொய்க்குமோ?" என்பதனால் அறியப்படும்.

ஆயின் திருவள்ளுவர் நூல் வேதமோ? எனின், வேதமே? அன்றோ? எனத் திருவள்ளுவ மாலையிற் காண்க.

திருக்குறள் வேதமெனப்பட்ட காரணம்.

இருக்கு, எசுர், சாமம் என்னும் இவ்வேதங்களைப் பற்றிக் கூறுமிடத்து நச்சினார்க்கினியர், "இவை வேள்விமுதலியவற்றை விதித்தலின் இலக்கணமாம்; இலக்கணத்தால் ஆராயப்படுதலின் இலக்கியமாம்" என்றனர்.

பெரிய புராண ஆசிரியர், "உலகியல் வேதநூல் ஒழுக்கம் என்பதும், நிலவு மெய்ந்நெறிசிவ நெறியதென்பதும்" என்னுமிடத்து வேதம் உலகியல் கூறுவதாகக் கூறினர்.

வேள்வி முதலியன உலகியலாய்வரும் என்பது, "ஆ பயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர் காவலன் காவானெனின்" எனத் திருவள்ளுவரே கூறுவது கொண்டறியப்படும்.

இவ்வேள்வி முதலியனவெல்லாம், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பயனும் பெறுதற்கு ஏதுவாம். ஆகவே வேள்வி முதலியனவற்றை விதிப்பதன் மூலம் நாற்பொருட் பயனுதவ உலகியல் கூறுகின்றது வேதம் என்பது போதரும்.

அவ்வேதமே போலத் திருக்குறளும், அறமுதனாற் பொருளும் பயக்க விதியும் விலக்கும் கூறுகின்றது.

"தாய பனுவல்" என்பதற்குப் பேராசிரியர் உரை கூறுகையில், "பனுவலாவது அறமுதல் நாற்பொருளைக் கூறும் இலக்கணம்; தாய பனுவல் என்றமையால், அங்ஙனம் கூறிச் செல்லுகையில், அம்முறையினின்றும் பிரிந்து இலக்கிய வகையான் பிறபொருள் கூறுவது" என்னும் பொருள்படக் கூறி உதாரணமாக,

"பொருள்கருவி காலம் வினையிடனோ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்"

என்பது விதித்து நிற்றலின் இலக்கணமாம் என்றும்,

"பலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று"

என்பது இலக்கியமாம் என்றும் காட்டினார்.

இதனால், திருக்குறள் இலக்கணத்தால் ஆராயப்படுதலின் இலக்கியமாயும், அறமுதலியவற்றை விதித்தலின் இலக்கணமாயும் வேதத்தின் தன்மைபெற்றது.

"அறம்பொருளின்பம் வீடடைதல்நூற் பயனே" என்னும் நூற்பயன் கூறுஞ் சூத்திரத்தை நம்மில் எத்துணையோர் கற்றிருப்பர்! ஆயினும், அவை நான்கின் இலக்கணங்களும் அவற்றாலாய பயனும், அவைபெறுவழிப் படுங்குறையும் இவையெனத் திருக்குறளிலன்றிப் பிறநூல்களிலேயும், ஒரு சேரச் சுருங்கிய வாய்பாட்டில் தெள்ளிதினுணர்த்தப் பட்டுள்ளன என்று கூற யாராலே முடியும்? முடியாமை பண்டன்றே, கொடிஞாழல் மாணிபூதனர்,

"அறனறிந்தேம் ஆன்ற பொருளறிந்தேம் இன்பின்
திறனறிந்தேம் வீடுந் தெளிந்தேம்—மறனெறிந்த
வாளார் நெடுமாற! வள்ளுவர்தம் வாயாற்
கேளா தனவெல்லாங் கேட்டு"

என்று வியந்து பாராட்டுவாராயினர்.

இத்தன்மைத்தாகிய சிறப்புடைமை நோக்கியே கம்பரும், கற்பகமனைய **அக்கவிஞர்** எனத் திருவள்ளுவரையும், அக்கவிஞர் நாட்டிய சொல் எனத் திருக்குறளையும், கூறியவர் அவ்வளவின் அமையாராய்த் **தோன்றல் சான்றது** எனவும் கூறுவாராயினர். தோன்றல் சான்றது—தலைமை நிரம்பியது.

இவ்வாறு ஐயப்பாட்டிற் கிடமின்றித் திருவள்ளுவரையும் திருக்குறளையும் அதன் சிறப்பையும் கம்பர் சொற்பெய்து பாராட்டியிருப்பது கண்டு மகிழ்தற்குரியதன்றோ?

சங்க காப்பியங்களைக் குறித்தவாறு.

ஆரணிய காண்டத்தே, கோதாவிரி நதியை வருணிக்குமிடத்து,

"புவியினுக் கணியாய்ஆன்ற பொருள்தந்து புலத்திற்றாகி
அவியகத் துறைகள்தாங்கி ஐந்திணை நெறியளாவிச்
சவியுறத் தெளிந்துதண்ணென் றொழுக்கமுந் தழுவிச்சான்றோர்
கவியெனக் கிடந்தகோதா விரியினைக் கண்ணிற்கண்டார்."

எனக் கூறியுள்ளார்.

உலகிற்கோர் அணியாய் நிறைந்த பொருள் தருவதாய், அறிவுரைகளையுடையதாய் அமுதினையொத்த அகப்பொருட்டுறைகளைக் கொண்டதாய், முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்னும் நிலங்களுக்காகிய ஒழுக்க நெறிகளைப் பொருந்தியதாய், எளிதிற் பொருள் விளங்கச் செஞ்சொற்களையுடைய தெளிவினதாய், கற்பார்க்கு இனிமை பயக்கும் நடையுடையதாய்ச் சான்றோர்கவி இருக்கும் என்னும் உண்மையைக் கோதாவிரிக்கும் சான்றோர் கவிக்கும் கூறிய ஒப்புமையால் உணர்த்தினார்.

ஈண்டுச் சான்றோர் என்றது யாரை? சான்றோர்கவி என்றது எதனை? என்று ஆராய்வோமாயின் அவை சங்கத்துச் சான்றோரையும், அவர் கவியையுமே குறித்து நிற்றல் இனிதுணரப்படும்.

என்னை? "அவியகத் துறைகள்தாங்கி ஐந்திணை நெறியளாவிக் கிடந்த சான்றோர்கவி" என்றமையின்.

அத்தொடர் ஒன்றுமட்டு மில்லையேல், புவியினுக் கணியாதலும், ஆன்றபொருள் தருதலும், புலத்திற்றாதலும், சவியுறத் தெளிந்திருத்தலும் தண்ணென்றொழுக்கமுந் தழுவி யிருத்தலும் பிறதேயத்துப் பிறமொழிச் சான்றோர் கவிகட்கும் ஏற்புடையதாய்ச் சான்றோர் கவியின் மேம்பாடு பொதுவகையாற் கூறப்பட்டதெனல் அமையும். மற்று அத்தொடரிருப்பதால், சான்றோர் என்றது சங்கப் புலவோரையும், சான்றோர் கவி என்றது அவர் கவியையுமே குறித்துநிற்கின்றன எனக்கொள்ள வேண்டியதாகின்றது.

என்னையெனின், அகப்பொருட்டுறைகளும் ஐந்திணையொழுக்கமும் பிறமொழிகட்கில்லையாய் நம் தமிழுக்கே யுரிய சிறப்புடைப் பொருளிலக்கணங்களாதலினென்க. அவை தமிழிற்கே யுரியனவாமென்பதனை,

"ஈண்டுப் பொருளென்றது அகம்புறம் என்னும்
இருகூற்றுப் பதினாற்றிணைப் பகுதிய வாய்ச்

செய்யுளிற் பாடுதற்குரிய இன்ப முதலிய
உலகியற் பொருளை" எனவும், "ஈண்டுக்
கூறப்படும் பொருட் பாகுபாடுகள் தமிழிற்கே
சிறந்து வேறொன்றாற் பெறப்படா" எனவும்,
தமிழ்மொழிப் புணர்ச்சிக் கட்படும் செய்கை
களும், குறியீடுகளும், வினைக்குறிப்பு வினைத்
தொகை முதலிய சிலசொல்லி லக்கணங்களும்,
அகம்புறம் என்னும் பொருட்பாகு பாடுகளும்,
குறிஞ்சி வெட்சி முதலிய திணைப்பாகுபாடுகளும்,
அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய
செய்யுளி லக்கணமும், இன்னோரன்ன பிறவும்
வடமொழியிற் பெறப்படா" எனவும்,

வடமொழி தென்மொழி ஆகிய இரண்டிலும் புலத்துறைமுற்றிய சிவஞான முனிவர் கூறுவது கொண்டு அறிக.

அன்றியும்,

"நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர்! கேண்மின் சிறந்தது"

என்பது தொடங்கி,

"இத்தள்ளாப் பொருளியல்பிற் றண்டமிழாய் வந்திலார்
கொள்ளாரிக் குன்றின் பயன்"

என்பது இறுதியாக உள்ள பகுதியாலும், அதற்கு, "நான் மறைப் புலவரை நோக்கித் தமிழது சிறப்புக் கூறுவாராய்ப் பொது வகையான் அவற்றிற்குக் காரணம் கூறுகின்றார்" எனத்தொடங்கி உரைவகுத்து, அடுத்துவரும் பகுதிக்குத் தோற்றுவாய் கூறு கையில், "இனி அக்களவொழுக்கத்தை யுடைமையான் வள்ளி சிறந்தவாறும், அத்தமிழை ஆராய்ந்தமையான் முருகன் சிறந்த வாறும் கூறுகின்றார்" எனக் கூறிய பரிமேலழகர் வாசகங்களா லும் அகப்பொருட்டுறையும் ஐந்திணையொழுக்கமும் தமிழிற்கே யுரிய சிறப்புடைப் பொருளிலக்கணங்களாமென்பது தெளிய லாம்.

ஆகவே "அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிய ளாவிச் சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவிரி" என்றது

சங்கத்துச் சான்றோரையும் அவர் கவியையுமே கருதிக் கூறப் பட்டது என்பது தெறப்படும்.

மேலும் சங்கப் புலவர்களை அன்று தொட்டின்றுகாறும் உரையாசிரியரும் பிறரும் **சான்றோர்** என்ற பெயராலே போற்றி புரைத்துவந்த—வருகிற மரபையும் நாம் நினையத்தகும்.

ஆயின் சங்க நூல்களைக் குறித்தவாறு என்னது சங்க காப்பியங்களைக் குறித்தவாறு எனத் தலைப்பிட்டுக் கொண்ட தென்னை? எனின், "அவியகத்துறைகள் தாங்கி ஐந்திணை நெறி யளாவி............**தண்ணென் றொழுக்கமுந் தழுவிச்** சான்றோர் கவி யெனக்கிடந்த கோதாவிரி" என்றமையின் என்க.

அஃதாவது கலித்தொகை முதலிய சங்கநூல்கள், 'அவி யகத் துறையும் ஐந்திணை நெறியும் அளாவிக் கிடந்தனவேனும், அவை தம்மகத்துள்ள ஒருபாட்டோடு மற்றொரு பாட்டிடைத் தொடர்பற்றுத் தனித்தனிப் பாடலாயமைந்தவாற்றால் 'தண் ணென்றொழுக்கமுந் தழுவிக் கிடக்கும்' கவி எனற்கில்லை; ஆகலின் அவ்வொழுக்கமுந் தழுவிக் கிடக்கும் பொருட்டொடர் நிலைச்செய்யுளெனப்படும் காப்பியங்களைக் குறித்தவாறெனத் தலைப்பிட்டுக்கொண்டேம். இது பொருந்தாதாம்பிறவெனின், சங்க நூல்களைக் குறித்தவாற்றினையேனும் மறுதுடன்பட்டாக வேண்டுமன்றோ?

"இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தின்
இடைச்சங்கத்துத் தொல்காப்பியம் புலப்படுத்திய
மாகீர்த்தியாகிய நிலந்தரு திருவிற்பாண்டியன்
அவைக்களத்து அகத்தியனாரும், தொல்காப்பியனாரும்,
இருந்தையூர்க் கருங்கோழி மோசியாரும்,
வெள்ளூர்க் காப்பியனாரும், சிறுபாண்டரங்க
னாரும், மதுரையாசிரியன் மாறனாரும், துவரைக்
கோமானும், கீரந்தையாரும் என்றித் தொடக்கத்
தார் ஐம்பத்தொன்பதின் மருள்ளிட்ட மூவா
யிரத்து எழுநூற்றுவர் தம்மாற் பாடப்பட்ட
கலியும், குருகும், வெண்டாளியும் முதலிய

செய்யுளி லக்கியம் ஆராய்ந்து செய்த
உதயணன் கதையுள்ளும்,............சிந்தா
மணியுள்ளும்,............மணிமேகலையுள்ளும்,
பிறவற்றுள்ளும், கூறினமையாலும்,
சொற்றொடர்நிலை, பொருட்டொடர்நிலை
என்னும் தொடர்நிலைச் செய்யுட்கும் காப்பியம்
என்று பெயர் கூறுதலும் ஆசிரியர்கருத்
தென உணர்க''

என்று உரைப்பாயிரத்து அடியார்க்கு நல்லார், காப்பியம் என்னும் பெயர் தொடர்நிலைச் செய்யுட்குக் கூறுதல் தொல்காப்பியர் கருத்துக்கு மாறுபட்டதன்று என்பதற்குச் சான்று காட்டியவிடத்தே கூறியிருக்கின்றார்.

சிலப்பதிகாரத்தைக் குறித்து அவர் எழுதலால், அதனை நீக்கி, உதயணன்கதை, சிந்தாமணி, மணிமேகலை, முதலிய காப்பியங்களிற் கூறப்பட்டன சான்றுகாட்டுதற்குக் கொண்டு, பிறவற்றுள்ளும் என்பதனால் வேறு சில சான்றோர் காப்பியங்களையும் குறித்துப்போயினர்.

அடியார்க்குநல்லார் உரைப்பாயிரத்து நமக்கு வேண்டுவது, உதயணன்கதை, சிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம் என்றின்ன நூல்கள், இடைச்சங்கத்தார் செய்த செய்யுள் இலக்கியம் ஆராய்ந்து செய்யப்பட்டன என்பது.

எனவே இவை தண்ணென் றொழுக்கந்தழுவி இருத்தலோடு, அவியகத்துறையும் ஐந்திணைநெறியும் அளாவியும் கிடப்பன என்பது இனிது போதரும்.

போதரவே ''அவியகத்துறைகள் தாங்கி ஐந்திணை நெறியளாவி................தண்ணென்றொழுக்கமும் தழுவிச்சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவிரி'' என்று கம்பர் கூறியது மேலே குறித்த நூல்களைக் கருத்திற் கொண்டே யாம் என்பது தெளியப்படும்.

அவற்றைத் தாம் கருதிக் குறித்தமை இனிது போதரும் பொருட்டேயன்றே; கம்பர்,

"தண்ணென் றொழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதாவிரி"

என்பாராயினர். சான்றோர் கவியின் மேம்பாடு பொதுவகையாற் குறிக்கப்பட்டதே யாமெனின், இக்காலத்தினும், ஒத்தியல் பொருளைக் குறிக்கும் மரபுக் கேற்பச் "சான்றோர் கவியெனக் கிடக்கும் கோதாவிரி" என்றல்லவோ அவர் குறித்திருக்க வேண்டும்? அவ்வாறு குறியாமே, "கிடந்த கோதாவிரி" என இறந்த காலத்தாற் கம்பர் கூறியதே அவர் சங்க காப்பியங்களைக் கருதிக் கூறினர் எனக் காட்டாதோ?

வரருசி கதை.

பண்டிதர். R. பொன்னுசாமி பிள்ளை அவர்கள்,
வடமொழி ஆசிரியர், உரத்தநாடு உயர்தரக் கலாசாலை.

(முற்றொடர்ச்சி துணர் 11. மலர் 4. பக்கம் 135.)

ஏழாம் அத்தியாயம்.

உபகோசையின் ஒழுக்கம்.

உபகோசை தவமேற் சென்ற தன் காதலன் உயர்வை உன்னி, நாளும் கங்கையின் முழ்கி, நல்விரதம் காப்பதானுள். அணிபணியணியாள்: ஓதியும் கோதாள்; உரிய அறவினை ஓம்பினுள்: கணவர் வரவைக் கவலையுடன் எதிர்நோக்கி நின்றாள். விரதத்தால் இளைத்தாளேனும் இவள்மேனி "விரதந்தனில் இளைத்தமேனி" என ஔவைப்பிராட்டியார் அறைந்தவாறே, வெண்பிறை மதியென விளங்கிற்று. அதனல் உலகோர் உள்ளம் அள்ளினள்.

இளவேனிற்பொழுதில் ஒருநாள், இவள் கங்கையாடக் கடிது செல்லுங்கால், மந்திரி மைந்தன் கண்டு, மான் மகன் கணையால் மருண்டு இடைமறித்து, இதனைக் கூறினன். 'பெண்ணணங்கே, நின் பெண்மை என் ஆண்மையை இன்று வென்றது

காண். அநங்கன் கணையால் பெரிதும் அலமருகின்றேன். நின்பானலம் அன்னகடைக்கண் சிறிதே பாலிப்பாய்' என இரந்து நின்றான்.

உபகோசையோ, உணர்வு திகைப்ப, வேடன் கைப்படு மான்போல் வெருண்டாள். பின், சிறிதேதேறி, அக்கிழ்மகனை நோக்கி, 'மந்திரி மைந்தரே, நும் கல்விக்கும், ஏனைக்குடிப் பிறப் பிற்கும் இது தகுமோ? வேலியே பயிரை மேய்வதானால் வேறென்னாகும்? இச்சிறுமதி கைவிட்டு இகந்து செல்க' என இடித்துரைத்தாள். அப்புன்மகன் 'நின் இன்பம் பெற்றன்றி என் துன்பம் தொலையாது. நம் செயலை யாரே நாடி யறிவர்? காரணம் யாதும் கழறாது கலந்துவிடு' என மேலும் மேலும் வேண்டினான்.

உபகோசையோ, உறுதுணையற்ற தன் நிலையும், மந்திரி மைந்தனின் மாணா உறுதியும், கற்பினைக் காக்கும் தன் கடமை யும் கருதிப்பார்த்து, 'இவனை இகலால் வெல்லல் அரிது, இனிய சூழ்ச்சியால் வெல்லலே வேண்டும்' எனத் தீர்மானித்து, 'அழ கரே, நும் ஆழம் பார்க்கவே நான் அவ்வாறு கூறினேன். எனக்கும் நும்மேற் காதல் கரை கடந்துள்ளது. ஆயினும், நானோ நற்குடிப் பிறந்தாளாவேன். நீரும் அதுவே. ஊரார் அறியினோ ஓயா தலர்தூற்றுவர். அதனால், இருவர்க்கும் தலைக்குனிவே எய்தும். ஆதலால், இன்னே செல்க. இன்றிரா முதல் யாமத்து வருக' என ஏய்ப்புரை தந்தாள். புல்லனும் புளகங்கொடு பொற்கெனச் சென்றான்.

சிறிதளவவள் சென்றதும், வேந்தன் புரோகிதன் விளித் தனன். யார் என நோக்குழி அவனும், 'கார்புனை கூந்தலாய், என்னுயிர் காவாய்! எனப் பலபல பிதற்றினான். இவனுக்கு இரண்டாம் யாமத்தை இயன்ற நேரமாகக்கூறி இடைந்து சென் றாள். என்னே! சின்னேரத்தில், படைத்தலைவனும் பாங்கர் எய்தினான். பசப்புரைகள் பல பேசினான். அவனுக்கு 'மூன் றாம் யாமமே முன்னியநேரம்' எனக் கூறி, மூடுகிச் சென்றாள். இரவுக் குறிபெற்ற அவ்விழி மக்களும் இன்ப எண்ணமுடன் ஏகினர்.

கங்கைபாடித் திரும்பிய அம்மங்கை, விரதம் சிறிதும் வீணுகாமல், அதனை அமைவுற முடிப்பதானுள். விப்பிர ராணேர்க்கு விருந்து செய்தற்காக, வணிகன்பால் வைத்தவான் பொருள் பெறத் தன் தோழியை அனுப்பினுள். அக்கபவனே, அதுதராது, ஆருமில் இடத்தில், அக்கற்புக் கணியாளை அழைத்து, 'நேரிழாய், நின்பாலே நான் நீங்காக் காதல் நிறை யக்கொண்டுளேன். அதனை நிறைவிப்பாய் எனின் நின்பொருள் யாவும் நிறைவாய் அளிப்பேன்' என நின்று பிதற்றினுன்.

அம்மொழிகேட்ட உபகோசை, தன் உருவழகை உளத் தாற் பழித்து, 'ஈண்டுச் சான்ருவார் எவருமிலரே! என் செய் வேன்!' என ஏங்கி அவனுக்கு நான்காம் யாமத்தை நற்பொழு தாக்காட்டி நடத்தினுள்.

அவ்வணிகன் நீங்கிய அந்நொடியே, உபகோசை உழை யரைக்கூவி, தனக்கு அன்று நேர்ந்த தகாதன அனைத்தும் சாற்றினுள். சாற்றி 'இப்புல்லர்களை இல்லாதொழிக்க இயன்ற தோர் சூழ்ச்சி புரிக' எனப் புகன்ருள். சூழ்கையில், அவளகத் தில் மின்னல்போல் ஓர் சூழ்ச்சி மேவியது. அதனைச் சிலதி யர்க்குச் செப்பி, ஆவன சில செப்பம் செய்தாள்.

காரிருளும் கண்டிரியக் கரிய மைத்திரளை மான்மத முதலிய மணங்கமழ் பொருள்கொடு, எண்ணெயிற் கலந்து ஏராளமாய் இயற்றினுள். அது நனைக்கப்பட்ட துண்டாடைகள் நான் கினைத் துவர முடித்தாள். அப்பகலே தப்பாமல், தச்சனைக் கொண்டு 'சொச்சம்' இலாது, முப்பெரும் பேழைகளை முடித்து வைத்தனள். இரவைக் கவலையுடன் எதிர்நோக்கி யிருந்தனள்.

எட்டாம் அத்தியாயம்.

தீயோர் திகைப்பு.

மக்கள் யாவரும் மறுகுவறிதாக, வசந்த விழாக்காண, மகிழ்வுடன் சென்றனர். அந்தணர் தெருவோ, ஆர் நடமாட்ட மும் இன்றி அமைவுற்றிருந்தது. அணிபணியணிந்து, அழகு மிக்கானும், ஓர் ஆடவன்மட்டும், அங்குமிங்கும்நோக்கி அசைந்து

செல்கின்றான். அவன் யாவன்? மந்திரி மைந்தனே! செல்கின்றவன் உபகோசையின் இல்லம் எய்தி, உவகையுடன் உட்புகுந்தான். வந்த அவனை அவளும் வரவேற்று, 'அன்பரீர், நீர் நீராடாதே, அழுக்கோடிருப்ப அங்கம் தொடேன். விரத மேற்கொண்டவளல்லளோ யான்? நேரம் தாழ்க்காமல் நீராடிப் போதுவீர்' என வேண்டினாள். அக்கயவனும் அதற்கு ஒருப்பட்டான். அவ்வளவில் அவள் அனைத்துக் குற்றேவன் மகளிர்க்குக் குறிப்பால் உணர்த்த அவர்களும் அவனை நீராட்டறைக்கு அழைத்துச் சென்றனர். அவன் மேலுள்ள அணிபணியாடைபாவும் அகற்றினர். அரை நிர்வாணியான அத்தீயவன்மருள, மையூறிய துண்டினை மருங்கில் உடுத்தினர். உச்சி முதல் உள்ளங்கால்வரை உடம்பெங்கும் ஊற மையைப் பூசினர். எண்ணெய் தேய்ப்பார்போல், இயல் உறுப்புக்களைப் பிடித்து விட்டிருந்தனர். அப்போது, கருங்காலிக்கட்டைபோல், சன்னங்கரேலெனக் காணப்பட்டான் அக்கயவன். இவ்வளவில், முதல் யாமம் முடியலாயிற்று. புகன்ற குறிப்பின்படி புரோகிதனும் ஆங்கே புகுந்தனன்.

உபகோசை உவகை தோற்றிப் புரோகிதனை உயர் இருக்கையில் இருத்தி, 'எனதாருயிர்க் கணவரின் அருமை நண்பரல்லரோ தாங்கள்! தாங்கள்வர இவ்வில்லம் தவங்கிடந்ததாமால்! எனப் பற்பல சொற்கள் படித்தாள். 'புரோகிதன் புகுந்தனன்' என்னும் செய்தி செவிமன்னியதும், சிலதியர், மந்திரி மைந்தனை நோக்கி, 'ஐயையோ! எங்கள் வருருசியார்க்கு வாய்த்த நல் நண்பர் புரோகிதர் இன்னே புக்கனரே! இப்போது என் செய்வோம்! எனக் கைம்முறித்து, அவற்குக் கனிவாகக் கூறி, சற்று இதனுள்ளே தங்கியிரும். அவர் அகன்றதன் பின்னர் அடுத்தது செய்யலாம்' என்று அவனைப் பேழையுட்புகுத்தினர். அவனும் பெட்டிப் பாம்புபோல் அதனுள்ளே, பேசாது அடங்கிக் கிடந்தான்.

மந்திரி மைந்தற்குப் போலப் புரோகிதன்றனக்கும் புகன்று, நேரே நீராட அனுப்பினாள் அவ்வாரணங்கு. பாங்கியரும், பழையவகையே, மையைப்பூசி, மருங்கினில் ஆடை உடுத்

தினர். இவ்வளவில், இரண்டாம் யாமம் இரிய, மூன்றும் யாமத்து முறை பிறழாது, படைத்தலைவன் பரபரப்புடன் பாய்ந்து வந்தான். அவ்வளவிற் புரோகிதனுக்கு அதனையே போக்காகக் காட்டிப் பெண்டிர்கள் அவனைப் பேழையுள் இட்டனர். வந்த படைத்தலைவற்கும், வணிகன் வந்த நேரத்தில், முன்னவர்க்கு வாய்த்த முடிவே தான் வாய்த்தது. மூவரும் பேழையுள் மோன மேற்கொண்டு முடங்கிக் கிடந்தனர்.

விளக்கினை வெளிச்சமுறச் செய்து, உபகோசை, வணிகனைப் பேழைபால் வரவழைத்து, 'வணிகப் பெரியீரே, என் கணவர் நும்பால் வைத்த வைப்பினைத் தருவீரே!' என்றாள். கேட்ட வணிகன் அக்கேடில் வீட்டில், யாருமில்லை எனமாறும் எண்ணி, 'உன் கணவன் வைப்பினை வைகறையில் வழங்கிடுவேன். ஒன்றும் கவலை உறேல்,' எனச்சூளுறவுடன் அவட்குச் சொல்லினான். உபகோசையும் பேழையில் உறைவோர் கேட்க, 'தெய்வங்காள், இரணியகுத்தன் இயம்பும் இம்மாற்றம் கேட்டீரோ? நினைவில் இதை நீர் நிலைபெறுத்துவீர்' எனக் கூறிச் சடக்கென விளக்கை அணைத்துச் சேடியர்க்கவனை நீராட்டச் செப்பினாள்.

சேடியர் அச்செட்டிக்குச் சிலநேரம், மைக்காப்பிட்டு, மைத்துணி உடுத்தினர். அவ்வளவில், இரவுகழிய, அவனைப் பிடர்பிடித்துந்திப் புறம்பே தள்ளினர்.

ஏமாந்த வணிகன் ஏங்கிச் செல்வுழி, வழியிடை நாயெல்லாம் வருவான்றனது வேடங்கண்டு, வெகுண்டு குரைத்தன. குனிந்த தலையை நிமிர்த்தாமலே, அக்கொடியவன் குன்றிப் போய்த் தன்னில்லம் குறுகினான். வேலையாள் மையைக்கழுவும் வேளை வெட்கிய அவன் நிலை விளக்கவும் வேண்டுமோ! பிறனில் விழைந்தான் பெறும்பேறு இதனிற்பிறிது வேறுண்டோ?

ஒன்பதாம் அத்தியாயம்.

உண்மை வெளிப்பாடு.

பொற்கோழி கூவிப்பொழுதும் புலர்ந்தது. உபகோசை உற்றுப்பெற்றூர்தமக்கும் உணர்த்தாமலே, உழையுறு பாங்கியர்

உடன் வர, நந்தமன்னன் அவைக்களம் நண்ணினாள். 'மன்னவ, முறையேயோ'! என முறையிட்டுச் சென்று, 'முறை தீர்க்கும் இறைவ, இன்று இரணியகுத்தன் என்னும் வணிகன் என் கணவர் அடைக்கலமாக இட்ட அரும்பொருளை அளிக்க மறுக்கின்றான். பெருமானே அதனைப் பெற்றுத் தரவேண்டுகின்றேன்' என வழிமொழிந்து வகுத்துரைத்தாள்.

வணிகன் வரவழைக்கப்பட்டு வினவியதும், 'இறைவ, இவள் கணவன் என் கையில் எப்பொருளும் தந்திலன்' எனத் துணிந்து பொய் சொன்னான். அவ்வளவில், உபகோசை, 'கோமானே, என் குடிக்கடவுளரே இதற்குக் கரியாவர். என் கணவர் அவர்களைப் பேழைகளிலடைத்தளித்துப் பெரிய தவம் செயச் சென்றார். தேவரீருக்குத் திருவுளமாயின் அவற்றைச் சேர்ப்பிப்பேன்' என்றாள். வேந்தன் விரும்பியதற்கிணங்கப் பேழைகள் மூன்றும் பிசகாமல் கொணரப்பட்டன. உபகோசை அப்போது, அப்பேழைகளை நோக்கி, 'என் வீட்டுத் தெய்வதங்காள், எள்ளளவும் பிசகாது, உண்மை உரைத்தருளுங்கள். இவ்வணிகன் உங்கள் முன்னர் என் கணவர் பொருள்பற்றிக் கூறியதைக் கூறுங்கள். உண்மை நீர் கூறுக்கால், உடனே இப்பேழைகளை ஏறத் திறந்திடுவேன். அல்லாக்கால், உயிரோடு உங்களை எரித்தொழிப்பேன்' என எடுத்துரைத்தாள். நவின்ற மொழி கேட்டுப் பேழையோர் நடுநடுங்கி, 'வணிகன் வரருசியார் வைப்பினைப் பெற்றது வாய்மையே' என வாய்மொழிந்தார். வணிகனே வழியின்றி, உண்மைதான் என ஒப்புக்கொண்டான்.

வியப்புற்ற வேந்தன் விருப்பப்படியே, பேழைகள் தாழ்கள் திறக்கப்பட்டன. இவற்றினுள்ளிருந்த இழிமக்கள் மூவரும் இருட்பிழம்புகள் போல் எழுந்து நின்றனர். இறையவனும் அமைச்சரும் இவரை எளிதில் அறிய இயன்றிலர். அறிந்ததும் அவையோர் யாவரும் அகடு சலிக்க நகைத்தனர். வேந்தனும் வியந்து 'காரணம் விளங்க விரித்துரைக்க' என விமலையும் விளைந்ததனைத்தும் விளம்பினாள். அவள் மொழி கேட்ட அவ்வவைக்களத்தோர்கள் 'நன்று! நன்று!! நவையில் ஒழுக்கம் பூண்ட நங்கைமார் பெருமை நவிலவொண்ணாததே' என நன்கனம்

பாராட்டினர். அப்பால் மக்கள் பிறர்மனை விழைந்த பாவியர் ஆகலின், வேந்தன் வெகுண்டு, அன்னார்பொருள் அனைத்தும் பறித்துப் புறநாடு செல்லத் துரத்தினன். தீயொழுக்கமே தீயவர் செல்வம் தேய்க்கும் திண்படையாகும்.

உபகோசையின் ஒழுக்கத் துயர்வும், சூழ்ச்சியின் திறமும், துகளறவறிந்த தோமில் இறைவன், இவளைநோக்கி, 'நங்கையே, நீ இனி எனக்குத் தங்கையே யாவாய். தீயோர் இழைத்த இத்தீமையை மறப்பாய்' என்று சில தேறுதல் செப்பிச் செல்வம் பலவும் வழங்கிச் செலவிடுத்தான். வர்ஷாசாரியரும் உபவர்ஷரும், உபகோசையின் திறமையறிந்து உவந்து பல படப் பாராட்டினர். ஊராரும் ஒப்பில் வியப்பமைந்த இச் செய்திகேட்டு இறும்பூதெய்தி நன்று! நன்று!! என நனி மகிழ்ந் திருந்தனர்.

(தொடரும்)

நயனநூல் நவநீதம்.

தஞ்சை. Dr., S. அமிர்தலிங்கம்பிள்ளை அவர்கள்.

(முற்றொடர்ச்சி துணர் 11. மலர் 4. பக்கம் 142.)

அதிதேவதை விபரம்.

மாத்திரை யிழைக்கும் கல்லை மகாவிஷ்ணுவாகவும், மாத் திரையை லிங்கமாகவும், முலைப்பாலை அமுதமாகவும், மோதிர விரலை சிவனாகவும், சுண்டு விரலை நந்தி தேவராகவும், மருந்துப் பையை வைகுண்டமாகவும், பையைக் கட்டியிருக்கும் கயிற்றை சக்தியாகவும், பாவித்து பெருவிரலைக் கொண்டும் நடுவிரலைக் கொண்டும் மாத்திரைக் கோலைப்பிடித்து கண்ணில் மருந்திடல் வேண்டும்.

மாத்திரை இழைக்க உரைகல் செய்யும் வகை குருந்தக்கல் ஒன்றை எடுத்து மூன்று அங்குலம் நீளம், மூன்று அங்குலம் அகலம், ஒன்றரை அங்குலம் கனமுள்ளதாய்த் தேய்த்து மெருகிட்டு வைத்துக்கொள்ளவேண்டியது. இவ்வாறு செய்யப்பட்ட உரை கல்லுக்கு **கனகமோகனம்** என்று பெயராகும்.

மருந்திழைக்கத் தக்கநீர்.

கோடை காலத்தில் பெய்யும் மழை ஜலத்தைப் பிடித்து வைத்துக் கொள்ளவும்.

நீர்வைக்கும் பாத்திர விபரம்.

எலுமிச்சம்பழத்தை இரண்டாக அறுத்த பாதி பழத்தின் வடிவினையுடையதாய், பாதம் வைத்ததாய் தாம்பிரத்தால் செய்யப்பட்டுள்ளதாயிருக்கவேண்டும். இந்தப் பாத்திரத்திற்கு **சத்தகுண்டலம்** என்று பெயர்.

உரைகல்லில் ஜலத்தை எடுத்துவிடும் கரண்டி விபரம்.

பாலைப்பழத்தை நீட்சியில் இரண்டு கூறாக்கி அதில் கூறு போன்ற உரு இருபுறமுள்ளதாய் நடுவிற் காம்பும் சேர்ந்து ஆறு அங்குலம் நீளமுள்ளதாய், தாம்பிரத்தாற் செய்யப்பட்டுள்ளதாய் இருத்தல்வேண்டும், இவ்வாறு அமைக்கப்பட்ட கரண்டியால் நீரை முகந்து உரை கல்லில் ஒரு கரண்டிவைத்து மருந்தை இழைக்க இருகண்களுக்கும் போதுமானதாகும். இக்கரண்டி, தூள் மருந்துகளை எடுத்து கண்ணில் போடவும் உபயோகப்படும். இதற்கு **நயனவேல்** என்று பெயர்.

அஞ்சனக்கோல் விபரம்.

செம்பு, வெள்ளி, தங்கம் இவைகளில் ஏதேனும் ஒன்றினில் அஞ்சு விரற்கடை நீளத்திற்கு மேற்படாமல் மத்தியில் மேடு வைத்து இருகடைப் புறங்களும் புஷ்ப முட்டைபோல் திரண்டு மெலிந்திருக்கவேண்டும்.

காரியக்கோல்.

அரிசித்திப்பிலி, தேன், பசுவினெய், பொன்னாங்காணிக்கீரை மிளகு, கோரைக்கிழங்கு, வெள்ளாட்டுப்பால், கோமூத்திரம், கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிவற்றலின் தோல் இவைகளையெல்லாம் அரைத்துக் காய்ச்சிய கஷாயத்தில் ஒரு பலம் காரியத்தை ஒன்பது தடவை உருக்கிச் சாய்த்தெடுத்துப் பத்தங்குல நீளமுள்ளதாகத் திரட்டிக்கோலாகச் செய்து கொள்வாயாக. இவ்வாறு செய்யப்பட்ட கோல்களில் அஞ்சனத்தையெடுத்து, கண்ணில் தீட்ட வியாதிகள் நிலைநிற்காதோடும்.

கண்ணில் மருந்திடும் வகை.

கனகமோகனமென்னும் உரைகல்லை இடது கையிலேந்திக் கொண்டு, இரண்டு மூன்று துளி நீரைவிட்டு நன்றாய்த் தேய்த்து, அலம்பித் துடைத்துவிட்டு சத்த குண்டலமென்னும் பாத்திரத்திலிருக்கும் சுத்த கெங்கையென்னும் மழை ஜலத்தையாவது, முலைப்பாலையாவது அல்லது சமயோசிதமான அனுபானங்களையாவது நயன வேலென்னும் கரண்டியால் எடுத்து வைத்து லிங்கமென்றழைக்கப்படும் மாத்திரையை ஊன்றி, பெருவிரல் ஆட்காட்டி விரலாகிய இரண்டு விரல்களால் மாத்திரையைப்பற்றி ரவைகள் உதிராமல் இலகுவாயிழைத்து பிறகு கனகமோகனத்தை வலக்கரத்தில் மாற்றி இடதுகை ஆட்காட்டி விரலால் மருந்தை வழித்து வைத்துக்கொண்டு மாத்திரைக்கோலை வலது கரத்தில்பற்றி இழைத்த மருந்தை கோலின் இருபுறங்களிலும் சமமாக எடுத்துக்கொண்டு, பிணியாளரின் இடது கண்ணில் முன்னம் மருந்தை வெள்விழியிற் றீட்டி, பிறகு வலது கண்ணின் வெள்விழியில் தீட்டி கண்களை மூடி விடவேண்டும். கணநேரம் கண்களை மூடிக்கொண்டிருக்கச்செய்து, பிறகு முழிக்கும்படிச் செய்தால் கண்களிலிருந்து நீர்வடியும். சிறிது நேரம் சென்றபின் கண்கள் குளிரும்.

மாத்திரையை இழைக்கும்போது மாத்திரையை கல்லில் தட்டலாகாது. தட்டினால் ரவைகள் உதிரும். ரவைகள் விழும்படி மருந்தையிழைத்துக் கண்ணிலிட்டால் கண் சிவக்கும்.

பத்தியத்திற்கு ஆகும் பதார்த்தங்கள்.

பண்ணைக்கீரை, சிறுகீரை, பொன்னாங்காணிக்கீரை, முருங்கைக்கீரை, தகரைக்கீரை, கையாந்தகரைக்கீரை, குரிஞ்சாக்கீரை, மின்னைக்கீரை, வெந்தயக்கீரை, பருப்புக்கீரை, பசலைக்கீரை, முருங்கைப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, புடலம்பிஞ்சு, பீர்க்கம்பிஞ்சு, கருணைக்கிழங்கு, சுண்டக்காய், சுண்டைவற்றல், மனைத்தக்காளிக்காய், மனைத்தக்காளிவற்றல், அவரைவற்றல், வாழைப்பிஞ்சு, வாழைப்பூ, துவரம் பருப்பு, பாசிப்பயறு, எலுமிச்சை ஊறுகாய், நாரத்தை ஊறுகாய், நாரத்தம்பழம், மாதுளம்பழம், விளாம்பழம், பூவன் வாழைப்பழம், கொடிமுந்திரிப்பழம், பசும்பால், பசுவெண்ணெய், பசுநெய், தேங்காய்ப்பால், வெல்லம், கரும்பு சர்க்கரை, சீனுக்கற்கண்டு வாதுமைப்பருப்பு, கோதுமை, புழுங்கலரிசி, பச்சையரிசி, தினையரிசி ஆகும். மற்றவை ஆகாதென அறிந்துகொள்வாயாக.

சுக்கையிட்டுக் காய்ச்சிய வெந்நீர் குடிக்கவேண்டும்.

வெந்நீர் விபரம்.

நீரை இரண்டிலொன்ருய்க் காய்ச்சிய வெந்நீரைக் குடிக்கப் பித்தம் நீங்கும்; மூன்றிலொன்ருய்க் காய்ச்சிய வெந்நீரைக் குடிக்க வாதம் நீங்கும். நாலிலொன்ருய்க் காய்ச்சிய வெந்நீரைக் குடிக்க கபம் நீங்கும்; எட்டிலொன்ருய்க் காய்ச்சிய வெந்நீரைக் குடிக்க அநேக வியாதிகள் நீங்கும்.

கண் அழன்றிருந்தால் இரவிலே பாலன்னம் புசித்துவிட்டு படுக்கையிலே உட்கார்ந்துகொண்டு உள்ளங்கால்களில் பசுநெய்யைத் தேய்த்து ஒரு தாம்பாளத்தில் தீட்டரிசித் தவிட்டைப் பரப்பி அதில் கால்களை வைத்தழுத்தி படுக்கையில் படுத்துக் கொள்ளவும். காலையில் எழுந்திருந்து குளிர்ந்த ஜலத்தால் காலைக் கழுவித் துடைத்துவிட்டு இழைத்த சந்தனத்தைப் பூசுவாயாக. இப்படிச் சிலநாட்கள் செய்து வந்தால் கண் குளிரும்.

அதிகாரம் 5.

ஜீவகாருண்யத்தோடு நயனவிதி நூலைத் தமிழிலியற்றியிருக்கிற நூலாசிரியர்களெல்லோரும் கண்ணில் வரப்பட்ட நோய்களை தொண்ணூற்றாக வரையறுத்திருக்கின்றார்கள். அவையாவன

காசவகை	—8	இவை 45-ம் கருவிழியிலுண்டாகும் வியாதிகள்.
படலம்	—7	
குமுதம்	—3	
விழியுந்தல்	—3	
திமிரம்	—7	
கருவிழிவரி	—3	
சுக்கிரன்	—5	
நெரிசல்	—3	
குந்தம்	—3	
பூ	—3	

எழுச்சி	—5	இவை 20ம் வெள்ளைவிழியிலுண்டாகும் வியாதிகள்.
படர்த்தி	—3	
நெரிசல்	—3	
புற்று	—3	
குமுளம்	—3	
வெள்ளைவிழிவரி	—3	

பில்லம்	—3	இவை 16ம் இமையிலுண்டாகும் வியாதிகள்.
இமைத்தடிப்பு	—1	
முடமயிர்	—1	
இழிச்சக்கண்	—1	
பற்பரோகம்	—3	
கழலை	—3	
இமைநீர்ப்பாய்ச்சல்	1	
சுற்றுக்குலைவு	—1	
புழுக்கடி	—1	
இமையுயர்ச்சி	—1	

கண்ணோக்காடு —1		
பூசாந்திரம் —2		
நீர்ப்படர்த்தி —3		இவை 15-ம் கடைக் கண்ணிலுண்டாகும் வியாதிகள்.
இரத்தப்படர்த்தி—4		
தசைப்படர்த்தி —5		

ஆக 96 வியாதிகள். தொண்ணூற்றாறு வியாதிகளையும் நாம் கண்டறிவதில்லை. அவைகளில் சில வியாதிகள் மட்டும் நமக்குப் புலப்படுகின்றன. எம்முடைய அநுபவத்தில் கண்டுணர்ந்த வியாதிகள் 14. அவையாவன 1. கண்ணோய் (Sore Eyes) 2. அமரம் (Baby's Sore Eyes) 3. வெண்ணோக்காடு 4. அன்னகோபம் 5. பில்லம் (Granluted Eye-lids) 6. படலம் (Pterygium) 7. குவளை விப்புருதி (Lachrymal abcess) 8. அக்கிரரோகம் (Herpis) 9. இரத்தப்படலம் 10. புழுவெட்டு (Absence of eye-lashes) 11. பித்தகாசம் (Cataract) 12. நேத்திரசூலை (Iritis) 13. பூ 14. முடமயிர் (Ingrowing Eyelashes) இன்னும் கண்ணில் வியாதிதோன்றியபோது இன்ன வியாதி என்றும் அதற்கு சாஸ்திர சம்மதமான சிகிச்சை இன்னதென்றுமறியாது கண்டனவற்றையெல்லாம் கண்ணினுட்பெய்து, வியாதியின் இலட்சணங்கள் கெட்டு பலவிதமான உபத்திரவங்களுக்குட்பட்டு வருந்துபவர்கள் கண்களையும், நோய்கள் முதிராதபொழுது அகாலங்களில் செய்யப்படும் சஸ்திரப்பிரயோகங்களினால் கெட்டகண்களையும், அநுபவமுதிர்ச்சியில்லாத பண்டிதர்களால் கெட்ட கண்களையும், எவ்வளவோ பார்த்திருக்கின்றோம்.

கண்ணோய் தொண்ணூற்றாறின் குணங்களெல்லாம் அகஸ்தியர் நயனவிதி ஐந்நூறில் கூறியிருப்பினும் எமதனுபவத்திற் கண்ட முற்கூறிய 14 வியாதிகளின் நுட்பங்களை யாம் லோகோபகாரமாக வெளியிடக் கடமைப்பட்டுள்ளோம்.

(தொடரும்)

கருதலளவைப் பகுதி.

திரு. த. இராமநாதபிள்ளை அவர்கள்,
சாவகச்சேரி, இலங்கை.

3-ம் அதிகாரம்.

முற்றொடர்ச்சி துணர் 11. மலர் 3. பக்கம் 101.

15. ஆராய்ச்சி முறையாக வகுத்தல்.

பொருள்களின் அமைப்பு (Structure), இயல்பு, பண்பு முதலியனவற்றின் ஒப்பின் காரணமாக பொருள்களை வகுத்தல் பயனுடைத்து. இயற்கையாராய்ச்சி நூலார் இம்முறை பற்றியே பொருட்களை வகுப்புகளாக்கியிருக்கின்றனர். விலங்கியல்நூல், பயிர்நூல், பௌதிகநூல், பொருள்நூல் முதலியன ஆராய்ச்சிமுறை தழுவியே தத்தம் பொருள்களை வகுக்கின்றன. ஆராய்ச்சிகளில் இயற்கைவகுப்புமுறையாகவும் செயற்கை வகுப்புமுறையாகவும் ஏற்றபெற்றி பொருள்களை வகுக்கிறோம். தனிப்பண்பு ஒன்றே ஒப்பாகவுடைய ஒருவகுப்பை வகுத்தல் செயற்கைப் பிரித்தல் ஆகும். விலங்கியல் நூலோர் அணில், எலி, நீர்நாய் என்பன நன்னும் விலங்கினம் என்ற ஒரு சாதியென்பர். இவற்றின் பொதுப்பண்பு நன்னுந்தொழில். இவ்வொரு ஒப்புப் பண்பின் பயனாக வேறு பல பொதுப் பண்புகளைத் தேரலாம். இவ்விலங்கின் பழக்க வழக்கங்கள் மிகவும் ஒப்பானவை. கூடுதல், தானியம், பழம் முதலிய தாவரப்பொருள்களை இரையாகத் தேடுதல், முதலியன இவற்றின் பொதுப் பண்புகள். விலங்குகளைக் கருப்பையிற்றோற்றுவன "குட்டியீனும் விலங்குகள்" என்றும் "முட்டையிற்றோன்றுவன" என்றும் பிரித்தல் செயற்கைப் பிரித்தல். இச்செயற்கைப் பிரித்தல் ஆராய்ச்சி வல்லோரால் ஆக்கப்பட்டதெனினும், இவ்வாறே இயற்கையிலும் விலங்குகள் இருபெரும் பிரிவினவாக இருத்தலைஅறிக. கருப்பையிற்றோன்றுவன பல்வேறு பண்புகளான் ஒப்புடையன என்பதை விலங்கியல் நூல்களில் வாசித்தறிக. முட்டையிற்றோன்றுவனவும் பல

பொதுப் பண்புகளுடையன. கருப்பையிற்றோன்றுவன பாலூட்டி வளர்க்கும் நாற்கால் விலங்குகள்; பெரும்பாலுந் தரையிற் சஞ்சரிப்பன. முட்டையிற்றோன்றுவன, பறவைகளும் பாம்புகளும் நகரும் விலங்குகளும் ஆகும். இவை உணவு முதலியவற்றான் மிகவும் தம்முள் ஒப்பாதலையறிக. தோற்றத்தால் ஒப்பில்லாதவற்றை அவற்றின் பொதுப்பண்புகளின் ஒப்பு நோக்கி ஒருவகுப்பாக வகுக்கின்றனர். உதாரணமாக புற்றெலி, பன்றி, மூஞ்சிறு என்பன ஒரு இனமெனப்படும்.

இனிப் புல், பூண்டு, பயிர் வகைகளை ஆண்மை பெண்மை குறிக்குந் தாதுக்களின் எண் காரணமாய் இலினியஸ் (Linaeus) என்பவர் வகுத்தனர். அவரது வகுத்தல் முறை செயற்கை முறையே. செயற்கை வகுப்பின் ஆதாரம் ஒரு சிறப்புப்பண்பே. இயற்கை வகுப்பின் பல பண்புகள் ஒருங்கு சேர்ந்து அதன் ஆதாரமாகும். புத்தகங்களை அடுக்கும்போது பருப்பம் நோக்கிச் செயற்கையாகவும் நூற்பொருள் முதலிய பல பண்பு நோக்கி ஆராய்ச்சி முறையாகவும் வகுக்கலாம்.

ஆராய்ச்சி நூல்கள் யாவும் செயற்கை வகுத்தலையும் இயற்கைவகுத்தலையும் அங்கமாயுடைய ஆராய்ச்சி முறையால் இயற்கைப்பொருளை ஆராய்கின்றன.

16 பெயரீடு.

இயற்கை யாராய்ச்சி நூலோர் இயற்கைப் பொருள்களின் இடங்களையும் அவற்றின் பண்புகளையும் இலகுவாய் விளக்குதற்காக இயற்கைப் பொருள்களுக்கு நூற்பெயர்களை இடுகின்றனர். துரிசை, செம்புக்கந்தகம் என்பது ஆராய்ச்சி நூலார் வழங்கும்பெயர். பொருள் நூலோர் ஒவ்வொரு கூட்டுப் பதார்த்தங்களுக்கும் ஆராய்ச்சிப் பெயர்கள் இட்டிருக்கின்றனர். விலங்கியல் நூலோரும், பயிர்நூலோரும் இனங்களுக்கும் சாதிகளுக்கும் உள்ள தொடர்பை வெளிப்படையாகக் காட்டுதற்கு ஆராய்ச்சிப் பெயர்களிட்டு இருக்கின்றனர்.

இயற்கை யாராய்ச்சிகளுள் பெயரீடு பெரிதும் உபயோகிக்கப்படும். ஆராய்ச்சி காரணமாக இட்டபெயர்கள் தனிப் பதார்த்தங்கள் புணர்ந்து கூட்டுப் பொருள்களை ஆக்குவதால் நன்கு உணர்த்துவன. பொருள் நூலோர் ஓர் இனப்பொருள்களுக்கு பொதுப் பெயரிட்டு வழங்குதலைக் காட்டுதும்.

Elements. தனிப் பதார்த்தங்கள்.		Oxides. கறள்கள் கூட்டுப்பொருள்கள்	Acids. எரிநீர்கள்	Salts. உப்புகள்
இரும்பு	(Iron)	இரும்புக் கறள்கள்		Iron Shulphates, Chlorides, Nitrates. இரும்புக் கந்தகஉப்பு இரும்புணவுப்பு
செம்பு	(Copper)	Cuprous or Cupric Oxides செம்புக்கறள்கள்	...	... ...
ஈயம்	(Lead)	Lead oxides ஈயக்கறள்கள்	... ...	Lead Sulphates ஈயக்கந்தகம்
சோடியம்	(Sodium)	Na O H சோடியக்கறள்கள்	...	Sodium Chloride சோடியம் உப்பு
முருகை	(Calcium)	CaO H_2 முருகைக்கறள்கள்	Sulphuric acid	Calcium Sulphate முருகைக்கந்தகம்
கந்தகம்	(Sulphur)	SO_2 SO_3 கந்தகக்கறள்கள்	H_2SO_4 கந்தகவெரிநீர்	Copper Sulphate செம்புக்கந்தகம்
கரி	(Carbon)	CO CO_2 கரிக்கறள்கள்	H_2CO_3 கரியெரிநீர்	Copper Carbonate செம்புக் கரியுப்பு
உணவாயு	(Nitrogen)	உணக்கறள்கள்	HNO_3 Nitric acid உணவெரிநீர்	... ...
பிராணவாயு	(Oxygen)	...	...	... ...
எரிவாயு	(Hydrogen)	எரிக்கறள் (நீர்)	...	... ...

தனிப்பதார்த்தங்கள் பிராணவாயுவுடன் புணர்ந்து கறள்களாகின்றன. தனிப்பதார்த்தங்கள் புணரும்போது அணுவணுவாகப் புணரும். கரியினது ஒரு அணுவும் பிராண வாயுவினது ஒரு அணுவும் புணர்ந்து கரியொற்றைக்கறள் என்னுமோர் நச்சு வாயுவாகின்றது. கரிவாயுவினது ஒரு அணுவும் பிராண வாயுவினது இருஅணுக்களும் புணர்ந்துழி கரிவாயு உண்டாகும். அதைக் கரியிரட்டைக் கறள் எனக் கூறுப. இவ்வாறே அணுக்களைக் குறிப்பதற்கு குறியீடும் பெரிதும் பயன்படுகின்றது. ஆங்கிலக் குறியீட்டு முறையைத் தமிழில் அமைத்துக் காட்டுகிறோம்.

கரியொற்றைக் கறளை	கபி	(நீர்—எ2 பி.)
கரியிரட்டைக் கறளை	கபி2	

எனக் (கரிவாயுவை) கூறியீட்டினால் நன்கு விளக்குகின்றனர்

செம்புக் கந்தகம் (துரிசு)	செ2	கெபி4
சுண்ணாம்புக்கல்	மு2	கபி3
உணவெரி நீர்	எ உணபி3	
	எ உணபி2	
கந்தகவெரி நீர்	எ 2	கெபி4
உப்பெரி நீர்	எ உ	
கரியுப்பு	சொ உ 2	

கந்தகவெரி நீர் என்னும் பெயரீட்டுப் பெயரை உணர்ந்தால் அக்கூட்டுப் பதார்த்தத்தில் கந்தகமும் எரிவாயுவும் பிராண வாயுவுமுண்டெனஇலகுவாக அறியலாம். பயிர் நூலின் பெயரீடு மிகச் சிறந்தது. ஆண்டுக்காண்க.

17. அளவைப் பிரித்தல் Logical Division.

ஒரு பண்பே பிரித்தலாதாரமாக ஒரு வகுப்பைப் பலசாதிகளாகப் பிரித்தல், தருக்கப் பிரித்தல் எனப்படும். தருக்கப் பிரித்தல் செய்யும்போது முறையாகப் பிரித்தல் வேண்டும். முறைகளில் வழுவுதல் போலியாகும்.

(அ) பிரித்தலாதாரப் பண்பு இனம் முழுவதற்கும் பொதுவாக இருத்தல்வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு பிரித்தற்படியிலும் வெவ்வேறு பிரித்தலாதாரம் வேண்டப்படும்.

(இ) பிரிக்கப்படும் ஒரு இனத்தின் பொருள்விரி, பல சாதிகளையும் சேர்த்துப் பெற்ற பொருள் விரியோடு சமனாகவேண்டும்.

- உருவம் (இனம்)
  - சாதிகள்
    - முக்கோணம்
      - இருசமகோட்டு முக்கோணம் (Isosceles)
      - சமகோடு முக்கோணம் (Equilateral)
      - சமனில்லா முக்கோணம் (Scalene Triangle)
        - குறுங்கோணம் (Actue angle)
        - செங்கோணம் (Right angle)
        - விரிகோணம் (Obtuse)
    - நாற்கோணம்
    - ஐங்கோணம்
    - அறுகோணம்

முதற்படியில் கோடுகளின் எண்ணே பிரித்தலாதாரம்.

இரண்டாம் படியில் மூன்று சாதிகளுள் ஒன்றையேனும் கூறாது விடுதல் இடைவிடுதலாகும். அது குற்றம்.

மூன்றும்படியில் கோணத்தின் இயல்பே பிரித்தலாதாரம். குதிரைகளை நிறமே பிரித்தலாதாரமாகப் பிரிக்கும்போது வெண்மை கருமை எனப் பிரித்து அத்துடன் உழவுக் குதிரை ஓட்டக்குதிரை எனச் சேர்த்தால் பிரித்தல் இரு ஆதாரமுடையதாகும். இது இரு ஆதாரக் குற்றமெனப்படும். இடைவிடுதல் இரு ஆதாரக் குற்றமென்னும் இரு குற்றங்களையும் களைந்து பிரிக்கவேண்டும்.

உள்ளத்தை இச்சை, உணர்ச்சி, சிந்தனை எனப்பிரித்தல் வகுத்தலாகும். பல பண்புகளை ஒரு விரித்த லாதாரமாக்கி ஒரு வகுப்பை பல சாதிகளாகப் பிரித்தல் வகுத்தலெனப்படும். அவற்றைப் பிரித்தலில் ஒரு பண்பே பிரித்தலாதாரம்.

நாற்கோணம்

- சதுரம் Quadrilateral
- சற்சதுரம் Square
- நீள்சதுரம் Rectangle
- சார்புச்சதுரம் Parallelogram
- சமன்சார்புச்சதுரம் Rhombus

நாற்கோணங்களை இவ்வாறு பிரித்தல் தருக்கப் பிரித்தலன்று. பிரித்தலாதாரம் கோடு, கோணம், சார்பு எனப் பலவகை ஆகும். ஆகையால் மேற்காட்டிய எடுத்துக்காட்டு வகுத்தலை விளக்கும். இனி விலங்கியல் நூலோர் விலங்கை வகுத்துக் காட்டும் எடுத்துக்காட்டு ஒன்றைக் காட்டுவாம்.

பிராணி

- முள்ளந்தண்டுள்ளன
  - கருப்பையிற்தோற்றும் விலங்கினம்:— இவை நாற்கால் மிருகங்கள்:—அணில், மாடு, ஆடு, புலி எனப் பல சாதிகளுடையன
  - முட்டையிற் தோன்றும் விலங்குகள்:— இவை நகரும் விலங்குகள்:—முதலை, பல்லி, ஓணன், அரணை உடும்பு என பல சாதிகளுடையன
  - பறவைகள்:—கிளி கோழி கழுகு குருவிகள் எனப் பல சாதிகளுண்டு
- முள்ளந்தண்டில்லாதன
  - சிலந்திகள், வண்டுகள், பூச்சிகள், புழுக்கள்

கருப்பையிற்றோன்றும் விலங்கினம்:—

- மக்கள்
- குரங்குகள்
- குளம்புள்ள விலங்குகள்
  - குதிரை
  - மாடு
  - ஆடு
  - எருமை
  - ஒட்டகம்
- பையுள்ள விலங்குகள்
- பூச்சிகளுண்பன:— நத்தை, வண்டு, கும்பி, தத்துவடியன் முதலியவற்றை உண்ணும் வௌவால், மூஞ்சூறு, பன்றி என்பன
- மாமிசம் உண்பன
  - பூனைச்சாதி
    - புலி
    - பூனை
    - சிங்கம்
  - நாய்ச்சாதி (நாய்கள், ஓநாய்கள்)
  - மீன்கள்
- நன்னும் விலங்குகள் அணில், நீர்நாய், எலி, நாவி

பிராணிகளை இருவகையாகப்பிரித்தல் செயற்கைப்பிரித்தலாகும். விலங்குகளை ஊண், அமைப்பு, பழக்கம் முதலிய பண்புகள் ஆதாரமாகப் பிரித்தல் வகுத்தலெனப்படும். ஒரு இனத்தைச் சேர்ந்தவை வேற்றினத்தோடு சொரூபப் பண்புகளால் வேற்றுமையாதலை ஓர்ந்துணர்க. குளம்புள்ள விலங்குகள் புல் பூண்டு இலை முதலியவற்றை உண்பன. அவை பெரும்பாலும் நாட்டு விலங்குகள். அவை கருப்பையில் தோன்றும் விலங்குகள். மாமிசம் உண்ணும் விலங்குகள் பெரும்பாலும் காட்டுவிலங்குகளே. மனிதனுக்கு அவை பகையானவை. கூரிய நகங்களும் வேட்டைப் பற்களுமுடையன. இங்ஙனம் ஒவ்வொரு சாதியும் சிறப்புப் பண்புகளை உடையனவாய்த் தத்தம் இனத்தில் அடங்குதலைக் காண்க. விலங்குகளின் இன வேற்றுமைகள் முதலியவற்றை ஆராய்ந்து தொகுத்துப் பல வகுப்புக்களாக இனம் வகுக்கப்பட்டது. யாழ்ப்பாணத்துக் கோயில்களைச் சிவன்கோயில், பிள்ளையார்கோயில், புத்தர்கோயில், கருங்கற்கோயில் முருகைக்கற்கோயில், வைரக்கற்கோயில் எனப் பிரிப்பின் சிற்பம், குருஉரிமை எனப்பல ஆதாரங்கள் உண்டாதலின் வகுத்தலாகும்.

19 மாறுகோட் பிரித்தல் Dichtomy.

இப்பிரித்தலில் இருசாதிகளே உண்டு. இயற்கையில் இவ்விருசாதிகள் இல்லை. ஒரு பண்பு உண்டோ இல்லையோ என்பதைத் தேர்தலே இப்பிரித்தலின் நோக்கம். **பிளேற்றோ** இப்பிரித்தலின் முறையால் வரைவிலக்கணங்களை அறியலாமென்று மொழிந்தனர். மாறுகோட் பிரித்தலால் வரைவிலக்கணங்களை விளக்கலாம் என்பதும், இனம், சாதி வேற்றுமைகளை விளக்கலாம் என்பதும், யாவருக்கும் உடன்பாடாகும். மாறுகோட் பிரித்தலின் உதவியால் வரை விலக்கணங்களை தேர்ந்து தெளியலாம் என்னும் கொள்கையை **அரிஸ்தாதில்** கண்டித்தனர். அஃதை உதாரணங்களால் விளக்குதும்.



மனிதன் பகுத்தறிவுடையவன் என அறிந்த பின்னரே உணர்ச்சியுடையவற்றை பகுத்தறிவுடையன, இல்லாதனவென இருகூறு கப்பிரித்தேம். முதற்படியில் பூதவுடம்புடையது இல்லாதது எனப் பிரிக்கும்போதும் மனிதன் பூதவுடம்புடையவன் என்பதை அறிந்தே பிரித்தேம். மனிதனின் வரைவிலக்கணத்தை அறியுமுன் உள்பொருளைப் பூதவுடம்புடையது, இல்லாதது எனப்பிரித்தால் அவ்விரு சாதியுள் மனிதன் எவ்வினம் எனத் தெரியாது மயங்குவேம்.

முக்கோணம்

மூன்றுகோடுகளும் சமமானது (சமமுக்கோணம்) — இல்லாதது

செங்கோணம் (30. பாகை உடையது) — இல்லாதது

முக்கோணத்தின் சாதிகளை நன்கு அறிந்தேமாகையால் சம கோடுடையதும் இல்லாததுமென இருவகையாகப் பிரித்தோம். சம முக்கோணத்தைச் செங்கோணமுடையது, இல்லாதது எனப் பிரிக்கவியலாது. செங்கோணத்தின் இலக்கணத்தை அறிந்தோமாகையால் செங்கோணமுடையது இல்லாததெனப் பிரிக்காதிருக்கிறோம். செங்கோணத்தின் இனத்தை விளக்க வேண்டுமானால் இல்லாதது என்னும் சாதியில் வைக்கவேண்டும். இப்பிரித்தலால் அறிவைப் பெருக்கலாம் என்பது போலி.

சகுந்தலை கதை.

காலஞ்சென்ற, உரத்தூர். கோ. வைத்தியலிங்கம் பிள்ளையவர்கள்.

முற்றொடர்ச்சி துணர் 11. மலர் 3. பக்கம் 85.

சகுந்தலை நிலைமை மாறுபட்டது. அவடான் அரிதின் வளர்த்த பறவைகளையெல்லாம் மறந்தாள். இனிய மலர்களையும் எறிட்டவள் பார்த்திலள். பூங்காவனமும் பொலிவழிந்தது. நாளுக்குநாள் அதன் வாழ்க்கை நலிந்தே வந்தது, எண்ணாதவெல்லாம் எண்ணி எண்ணி யவளேங்கினாள். எவ்வெத் தொழிலினும் மற்று எவ்வெப் பொருளினும் அவள்மனம் இறந்தவளாயினாள். மனமிறந்ததையல்லது அவடுயரம் இறந்தபாடில்லை. தன் காதலன் சென்ற சேணிடை வெளியே அவள்

மனஞ்சென்று தொடர்ந்தது. அவட்குக் குணநெகிழ்ச்சி யுறைந்திறுகியது. வளருமியல்பிற்றாய அவள் மங்கைநலம் வாரிமுகங் காணாத வஞ்சிபோலாயிற்று. யாதொன்று நினையாதிருப்பாள் சிலநேரம். எதையோ கருதி நகைப்பதுஞ் செய்வாளொரு நேரம். யாதேதோ பேசுவது போல வாய் முணுமுணுத்தலுமுண்டு ஒவ்வோர் நேரம். காதலன் கிளந்த கட்டுரையனைத்தும், ஏதமென் றெண்ணி யிரங்குவள் சிலகால்.

யானுந் தோழியு மாயமு மாடுந் துறை நண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண் டார்
தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவாரேல்
கானும் புள்ளுங் கைதையு மெல்லாங் கரியன்றே.

என்று அக்கானக மெல்லாம் விளித்துப் பேதுற்றாள்; மீண்டும்

சோலை யார்ந்த சுரத்திடை
காலை யார்கழ லார்ப்பவும்
மாலை மார்பர் வருவரேல்
நீல வுண்க ணிவள் வாழுமே.

என்றோர் சிந்தடி பாடி நொந்து வாடினள். இவள் பாடியென்னை? வாடி யென்னை? மன்னன் வருவே னென்ற நாளும் பொய்த்தது. அவள் வரியே றுண்கண் ணீருநில்லா. இனியவடன் காதலனைத் தொடர்ந்து சென்ற நெஞ்சையல்லது நோவுதற்கில்லை.

பெருங்கட றுயில் கொள்ளும் வண்டிமிர் நறுங்கானம்
காணுமை யிருள்பரப்பிக் கையற்ற கங்குல்வாய்
மாணாநோய் செய்தார்கட் சென்றாய்மற் றவரைநீ
காணவும் பெறுவாயோ காணாயோ மடநெஞ்சே.

என்று தன் ஏழை நெஞ்சொடு கிளந்து, எழுதெழில் சிதையவழுதன ளேங்கி, இருந்தன ளிருக்கும் போழ்தத் தாங்குத், துருவாச ரென்றொரு முனிவர் தோன்றினார். அவர் இயல்பாகவே சினமிக்குடையர். கண்ணுவர்பாற் போந்த விருந்தினரென்று தன்னையவர் சொன்னார். அப்பெரிய ரெதிரே யமர்ந்திருந்தும் அவள் கண்களும் புலனிழந்தன. அவர் சொல்லிய

தோன்றும் அவள் செவியிற் புகுந்திலது. மீள மீள அவளை யவர் பல்காலும் விளித்தனர். அவர் எத்தனை முறை கூவியுமென்? மனமிறந்திருந்தாள். என்சொலக்கூடும்? மறு மொழி கொடாஅதும், வழிமுறைப்படாஅதும், வாளா விருந் தனள். அதுகண்டு; துருவாசர் முனிந்து அவளைக் கடிந்து "ஏடி பேதாய்! மற்றொருவன்பால் வைத்த அன்பாற்றருக்கி என்னை மதியா திகழ்ந்தாய், அறியாய்! அறியுமாறு காட்டுவல். நீ யாரை நினைந்து தவித்தியோ அதன் உன்னை மறந்திகந் தொதுக்குக" என்றார். அக்கடிய மொழிகள் அருகி வந்த தோழிகள் செவியில் இடிபோலக் கேட்டன, கேட்கவே; அன்னு ரோடிப் போந்து அவரடிகளிற் றாழ்ந்து வீழ்ந்து அழுதன ராய்த், தொழுதனராய்;

"எங்கோ வாழி! வெஞ்சொற் கேண்மதி,
வழுவாச் சீலம் வாய்மையிற் கொண்டோய்,
மன்னுயிர் முதல்வ! வறமுமீ தன்றால்
பேதைமைச் செய்கை யவாவே யதனாற்
றீவினை யுறுப்பச் சென்றன ளல்லதை
மேவரு முதுமொழி விழுத்தகு செல்வ!
செய்தவம் பிழைப்பிலள் அயர்ந்தனள் தேருள்
நன்னுத லரிவை சகுந்தலை
நின்னடிக் குரியள் பொறுத்தனின் கடனே"

என்று குறையிரந்து முறை வேண்டினர். வேண்டலுங் கேட்டு அப்பொழுதுதான் தன்னை உணர்ந்தாள் சகுந்தலை. அவளும் எழுந்து அவரடிகளில் விழுந்து தலை கவிழ்ந்து நின்றாள். முனி வருஞ் சற்றே சினந்தணிந்து "நன்று மடவீர்! என் வாய்மொழி பிழையாதெனினும் யாதானுமோர் அடையாள முணரின் இவளை அவன் உணரும்" என்றருளிப் போயினர். அற்றாக; நாட்கள் பல கழிந்தன. திங்கள் பல கடந்தன. திங்களு நாளுஞ் செல்லச் செல்லச் சகுந்தலைக்குத் துயருங் கவலும் மயர்வும் மிகுந்தன. நகையு முட்கொண்டாள். "நன்றே காதலர் சென்றவாறே, நயந்த காதலர் செய்கை நன்றே. நிறை தளராதவரென்று அவர் செய்த கொடுமையை நான் மறைப்

பேன். மறைப்பினுமென்? முறைதளர்ந்த மன்னவன்கீழ்க் குடிகள் கலங்கு மாறுபோல என் கண்கள் கலங்காநின்று நீரொழுகுமாயின் யானதற் கென்செய்வேன். அவர்தாங் கொண்ட கோட்பாட்டினைத் தளராதவர் என்று எனக்கவர் செய்த கொடுமையை நான் மறைப்பேன். மறைப்பினுமென்? சுற்றங்கெட வாழ்பவன் ஆக்கம் பொலி வழியுமாறு போல என் றோள்கள் பொலிவழிந்து கலுழுமாயின் யானதற் கென்செய் வேன். காதலர் என்னிற் காதலின்று நீங்கினரோ! நீங்கா ரேனும் தூதொடுகூறி யொருவார்த்தையேனும் வரவிடுக்க மறந் தனரே! அவர் வருந்துணையும் நான் இறந்து படாமல் இருந்து காண்பேனே! முடியுங் காரியம் எதுதானென்று யான் அறி வதற் கில்லையே என நினைந்து நினைந்தாற்றளாயினள். அவ் வேளை; நரம்பிசை காட்டிச் சுரும்பு நரல, வம்பவிழ் மலரிற்றும்பி முரல, தொடையொடு வரிவண் டடைகொடு முயங்க, மாங்குயில் கூவத் தேங்கிளிகுளர, எரியினுருவென வில்வம் பூப்பப், பொரியி னுருவெனப் புன்குபூ வுதிரப், பொன்னெனக் கோங்கம் பூந்தா துதிர்ப்ப, மன்னன் மாறன் மகிழ்துணை யாகிய இன்னிள வேனில் வந்த திவணெனக் கண்டு ஆற்றளாய்;

"அவரோ வாரார் தான்வந் தன்றை
எவன்செய வந்ததிவ் வேனில்
நவன்செயு மேனி நண்ணுப் பொழுதே.

கணவரைப் பிரிந்த மகளிர் நுதல்போல முன்பு பூவின்றாக விருந்த பொய்கை பின்பு, அத்தலைவரைக் கூடின அவர்தம் முகம்போலத் தாமரையைப் பூக்காநின்ற திவ்விளவேனில், நங்காதலர் தப்பாமல் வருவேமென்றுகூறின காலமல்லவா இது! எல்லோர்க்கும் இன்பத்தை யூட்டு மிவ்வேனிலான் யான் பெற்றதென்? என்னெஞ்சங் கலங்கா நின்றது. எங்ஙனம் ஆற்றுவேன். அறிவுடையார் தாங்கொண்ட வினைமுடித்தற்குக் காலம் வருந்துணையும் அடங்கியிருக்கு மாறுபோல மலர்தலைச் செய்யாதிருந்த கொம்புகள், நிலையாமை யுணர்ந்த பொருளுடை யார் கொடை போலக் கொத்துக்களில் மலர்களைச் சொரியா

நின்னதிவ் வயந்தவேனில், விரைந்துவந் தழைப்பலென்று நங்காதலர் நமக்குக் கரந்து கூறிய காலமல்லவா இது! இவ்வின்ப வேனிலான் யான் பெற்றதென்? என்னுவி சோர்கின்றது எங்ஙனம் வாழ்வேன்? நிறுத்தவும் நில்லாத கண்கள்நீர்மல்க அவர் நமக்கு வருவே மென்ற காலம் இதுவல்லவா? இதனல் யான் பெற்றதென்? உணர்வழிகின்றது. என் நிலைமை என்னகும்! இறந்து படுவேமா அன்று ஆற்றியிழிப்பேமோ வென்று நெஞ்சுடைந்து நாம் வருந்தி விடுக்க; அவர் நமக்கு வருவேமென்று உரைத்த காலம் இதுவல்லவோ? இக்காலம் எய்தியதால் யான் பெற்றதென்? உடல் மெலிகின்றது. எப் படி யாற்றுவேன். நினைக்குந்தோறும் நெஞ்சழியச் செய்து நீங்கின காதலர் என்றுதான் நமக்கு எய்துவர் கொல்லோ! என்கண் போல அறுதியையுடைய நீர் இற்று ஒழுகும் இம்மு திர்ந்த இளவேனிற் காலத்தும் வந்திலர்.

தகைசான் ஞாலந் தவறுங் கொல்லோ
நகையா கின்றதே தோழி
மம்மர் நெஞ்சினர் தொழுதுநின் றதுவே

என்று தோழியோடு ஒருவார்த்தை சொன்னள். சொல்லிச்; சூரைக்காற்றிற் சாம்பிய வேரிமலர்போல் வாடினள்.

நாடிறந் தென்னை நயந்த காதற்
பீடுகெழு வேந்தர் பிரிந்து
வீடுவர் கொல்லோ வேய்மென் றோளி!

என்று உண்கண் சிவப்ப அழுது நின்றாள். அதுகண்டு அநு சூயை சகுந்தலையைப் பார்த்து அன்னய், நீ வருந்தற்க, அவர் அத்தன்மையர் அல்லர்.

வாரா தமைகுவரல்லர் மன்னர்
வாரா தமைகுவ ரல்லர்
ஆரா வன்புநின் பாலமைந் தோரே
வருவர் வருவர் விரைவி னெம்மோய்
அஞ்சன் வாழி யஞ்ச லூரியின்
ஆசையிற் றீம்பா லுண்டு
பூசை மீண்டுப் புகுதா தொழிமே,

என்றனள். மற்றொரு தோழி பிரியம்வதை என்பாள்

பேதை நெஞ்சம் பின்செலச் சென்றோர்
கல்வினும் வலிய ரம்ம!
பல்வித மூண்கண் ணழப்பிரிந் தோரே.

என்று தானே சொல்லிக் கொண்டாள். சொல்ல; அனுசூயை மீண்டும்;

எனைத்தானுந் தீதில ராகியார் வேந்தர்
நிற்பிரிந் தமைகுவ ரல்லரோர்
பொற்புறு கருமம் பற்றி யோரே.

பிறந்த உயிர் தாயைக்கண்டு இன்புறுவது போலத் தம்மாற் காக்கப்படுங் குடிமக்கள் தம்மைக்கண்டு இன்புறுதலின் தாம் அவர்கட்குத் தம் உருக்காட்டுதற்கு நின்னைப் பிரிந்தனர் போலும்! இவ்வொழுக்கம் நம் நாட்டிற்கு இயல்பேகாண். கவலற்க,

நசைகெட நட்டோரி னன்றி நவையிரீஇ நானிலங்கொண்
டிசைபடக்காவல்செய் வானிற் பிரிந்தன ரேங்கலெம்மோய்
வசைகெட வாழ்மகி பால னகர்த்தமிழ் வாணனெங்கோன்
மிசைகொடு பல்கலை தேர்கதி ரேசன் விரிபொழிற்கே

என்று பிரிவுணர்த்தினள். ஈண்டுப் பிரிவாவது களவானுங் கற்பானும் பொழிலிடைப் புணர்ந்து தலைமகன் தலைமகளை விட்டுச் சில்பகல் தமியனுதல். அப்பிரிவுதான்,

ஓதற் பிரிவே, காவற் பிரிவே,
தீதுறு பகைதணி வினையிற் பிரிவே,
அரசர்க் குற்றுழிப் பிரியும் பிரிவே,
பொருணசை யுற்றுப் பிரியும் பிரிவொடு
பரத்தையிற் பிரிவென் றறுவகைப் படுமே,

அவற்றுள் இது காவற் பிரிவாம். காவற்பிரிவாவது தம் நாட்டகத்தும் நகரத்தும் நலிவார் உளராக நலிவு காத்தற்குப் பிரியுமென்பதன்று; நாட்டைப் பிறர்புகுந்து அலைப்பதுங் கொள்வதுஞ் செய்தலாற் குடிகள் நலிவெய்தினும், மாரி குன்றி வளனில் கெடுதலான் நலிவெய்தினும், பிறவாற்றான் நலிவெய்தினும்

அம்மன்னன் ஆண்மையிற் குறைபட்டானும். ஒழுக்கத்தின் இழுக்கினனும். பின்னை என்னைகொல் நலிவுகாத்தலாமாறெனின்; தனக்கு உற்றது உரைக்கலாத மூத்தாரும், பெண்டிரும், இருக்கை முடவரும், கூனரும், குருடரும், பிணியுடையாரும் என இத்தொடக்கத்தார் தம் முறைக் கருமங் கேட்டுத் திருத்துதற் பொருட்டாகவும், காட்டகத்து வாழும் உயிர்ச் சாதிகள் ஒன்றனையொன்று நலிவன உளவாயின விடத்துத் தீதென்று அவற்றை முறை செய்தற்கும், வளனில் வழி வளந்தோற்றுவித்தற் பொருட்டாகவும், அறச்சாலையே, கோயிலே, அம்பலமே யென்றித் தொடக்கத்தனவற்றை ஆராய்தற்கும், அழிகுடி யோம்புதற்கும் பிரிந்து காக்கும் பிரிவாம். அதுவும் பல திறப்படும். படவே; இவ்வெல்லாங் காவற் பிரிவாகும்.

இத்தகைய காவற்பிரிவை உணர்த்திச் சகுந்தலையை அனுசூயை ஆற்றுவித்தாள். அவ்வளவின் அவள் ஆற்றி யடங்கினாளல்லள். (தொடரும்.)

மதிப்புரை.

இந்தியாவின் கிராமப் பொருள்நிலை; விலை ரூபா ஒன்று.
நாணயம் ,, ஒன்றேகால்.
நாணயமாற்று ,, ஒன்றரை.

இம்மூன்று நூல்களும் மதுரை அமெரிக்கன் கலாசாலைப் பேராசிரியர் திரு. J. S. பொன்னையா அவர்கள் M. A., இயற்றியவை. மேனாட்டுக்கலைகளில் ஒன்றாய Political Economy எனும் பொருள் நூலின் சிறந்த பகுதிகளை எளிய தமிழ் நடையில் எழுதி தமிழ்க்கலையை இவ்வாசிரியர் வளனுறச் செய்திருக்கின்றனர். அங்கிலக்கலைகளில் துறைபோகிய புலவர்கள்செய்யும் தாய்மொழித்தொண்டு, தமிழ்மக்கள் நன்றியுடன் போற்றத் தகுவது. கல்லூரித் தலைவர்களும், பல்கலைக் கழகத் தலைவர்களும் இத்தகைய நூல்களைப் பாட புத்தகங்களாக நியமித்து இங்ஙன் முயற்சிகளை ஊக்கி வளம்பெறச்செய்யும் கடப்பாடை மேற்கொள்ளவேண்டும். தமிழ் மக்களாவார் கலை நூல்களைக் கற்றுத் தெளிவடைந்து அறிவு விளக்கம் பெறுதற்பொருட்டு இந்நூல்களை முறையே பயிலவேண்டும். தமிழ்ச் சங்கங்களும், நூல் நிலையங்களும் இத்தகைய நூல்களை ஆதரித்து அவை நாடெங்கும் பரவச் செய்து நூலாசிரியரை ஊக்குவாராக.

யவனமஞ்சரி:—யாழ்ப்பாணம் சைவப்பிரகாசயந்திரசாலை. விலை ரூபா 1. கிரேக்கதேயத்தின் பழங்குடி மக்களாகிய யவனர் என்பாரது அறநெறிகளைத் தமது கூர்த்த மதியால் செவ்வனம் ஆய்ந்து அரிஸ்தாதல் (Aristotle) என்னும் கலைவாணர் யவனமொழியில் எழுதிய ஒழுக்கநூலை ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் அங்கிலமொழியில் மொழிபெயர்த்தெழுதியதை யாழ்ப்பாணத்துப் பருத்தித்துறையிலிருக்கும் தத்துவ நூலறிஞர் திரு. த. இராமநாதபிள்ளை அவர்களால் தமிழில் எழுதப்பெற்றிருக்கிறது. அரிஸ்தாதல் என்னும் பேரறிஞர் பெருமைசால் அலக்சாந்தர் எனும் கிரேக்க மன்னரின் குருநாதர்; கி. மு. 322 ஆண்டின் முன் வாழ்ந்தவர்; வானநூல், பொருணூல், விலங்கியல்நூல், பயிர்நூல், பௌதிகநூல், தருக்கநூல், தத்துவநூல், இலக்கிய ஆராய்ச்சிநூல், ஆதிய பல துறைகளிலும் சிறந்தநூல்களை இயற்றியமூதறிஞர். அத்துணைப் பழங்குடிமக்களாகிய யவனரின் நாகரிகப் பண்புகளையும், வாழ்க்கையின் நோக்கத்தையும், ஒழுக்கத்தின் மேம்பாட்டையும், அறநெறிகளையும் காரண காரிய முறையில் எழுதப்பெற்ற "யவனமஞ்சரி" தமிழர்க்குப் புதுவிருந்தாகும். பயில்தொறும் நயம் பயக்குமாறு, செவ்விய தமிழில் அணிபெற இயற்றப் பெற்றது. இவ்வரியநூலை தமிழுலகு நன்றியுடன் வரவேற்றுச் சீருடன் போற்றும் தரத்தது. நூலாசிரியராகிய பிள்ளை அவர்களின் தமிழ்த்தொண்டை மிகமிகப் பாராட்டுகின்றோம்.

குறிப்பு.

தமிழ்ப்பொழில் துணர் 11. மலர் 2-ல் "கொல்லேறு தழுவுதல்" என்னும் கட்டுரையை வெளியிட்ட சின்னாட்களின் பின் அதே கட்டுரை துணர் 1. மலர் 9-ல் அஃதுபோது பொழிற்றொண்டராயிருந்த திரு. R. வேங்கடாசலம் பிள்ளை அவர்களின் கட்டுரையாக வெளி வந்த செய்தி எமக்குத் தெரியவந்தது. அதனையே படியெடுத்து மற்றொரு புலவர் எழுதுவாரென யாம் நினையாதபடியால் ஆராயாது வெளியிட்டமைக்கு மிகவும் வருந்துகின்றோம். மேற்கண்டவாறு துணர் 11. மலர் 2-ல் வெளி வந்த கட்டுரையின் தொடர்ச்சியாக வெளியிட வேண்டி துணர் 1. மலர் 9-ல் காணும் எஞ்சிய பகுதியை மீட்டும் அனுப்பியிருக்கின்றார். இப்புலவரின் ஏழைமதிக்கு மிகமிக இரங்குகின்றேம்!

பொழிலுக்குக் கட்டுரை வழங்கும் புலவர்கள் யாரும் இத்தகைய குற்றங்கட்குரியராகாதவாறு எம்மைக் காத்துப் புரப்பார்களாக.

பொழிற்றொண்டன்.

அநுபந்தம் க.

கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரிக்கு யுவ, ஆடித்திங்களின்போது நன்கொடையுதவிய அன்பர்களின்பெயரும் விவரமும்.

திங்கள் நன்கொடை.

			ரூ	அ	ப
திரு. ஆ. சோதிபாண்டியன்	அவர்கள்	தஞ்சை	5	0	0
,, க. நடராசன் B.A., B.L.,	,,	,,	10	0	0
,, வே. அ. அனந்தவிசயமுதலியார்	,,	கரந்தை(ஆடி, ஆவணி)	3	0	0

ஆண்டு நன்கொடை.

திருக்காட்டுப்பள்ளி திரு. அ. வடிவேலர் அவர்கள் வழியாக வரவு

		ரூ	அ	ப
,, Dr. வா. தங்கவேற் பிள்ளை	அவர்கள்	5	0	0
,, R. தீனதயாள நாயடு	,,	5	0	0
,, T. V. A. பிச்சையா நரங்கியார்	,,	2	0	0
,, T. R. மாதவ பிள்ளை	,,	1	0	0
,, சையத் இப்ராகிம் சாகிப்	,,	1	0	0
,, சுந்தரம் பிள்ளை	,,	1	0	0
,, கோதண்டபாணி நாட்டார்	,,	1	0	0
,, P. சுப்பையா பிள்ளை	,,	1	0	0
,, ஜான் ஞானபுதம்	,,	1	0	0
,, குப்பையாண்டிக் களத்தில்வென்றார் ஓம்பத்துவேலி		1	0	0

தஞ்சை

		ரூ	அ	ப
,, L. K. பிரணதார்த்திஅரன் பிள்ளை	அவர்கள்	15	0	0
,, T. D. மகாலிங்கம் பிள்ளை B.A., B.L.,	,,	5	0	0
,, நா. கந்தசாமி பிள்ளை (ரூ. 100ல் மூன்றும் தவணை)		10	0	0
,, D. இராசராசேசுவரன் B.A., B.L., (ரூ. 5-ல்முதல்தவணை)		1	0	0
,, R. சீனிவாச ராவ்	,,	5	0	0
,, K. S. இராமசாமிச் செட்டியார் B.A., B.L.,	,,	5	0	0
,, முகம்மது இப்ராகிம் M.A., B.L., (ரூ. 5-ல் முதல் தவணை)		1	0	0
,, A. நரசிம்மாச்சாரியார் B.A., B.L.,	,,	5	0	0
,, K. S. கலியாணசுந்தரம் பிள்ளை	,,	50	0	0

கரந்தை

திரு. கு. மாணிக்கம் பிள்ளை	அவர்கள்		1	0	0
,, வ. க. அருணசலம் பிள்ளை	,,	(ரூ. 2-ல் முதல் தவணை)	1	0	0
,, Dr. L. சொக்கலிங்கம்பிள்ளை	,,	(ரூ.12-ல் முதல் தவணை)	5	0	0
,, ரா. அரங்கநாத அய்யர்	,,		1	0	0
,, P. V. இராமையர்	,,		1	0	0
,, T. S. நாராயணசாமி அய்யர்	,,		20	0	0
,, T. A. வாசுதேவ பிள்ளை	,,		5	0	0
,, சிவ. சண்முகசுந்தரம்	,,		1	0	0
,, வே. கோவிந்தசாமி நாயடு	,,	(ரூ. 25-ல் முதல் தவணை)	2	0	0
,, Dr. K. குப்புசாமிப்பிள்ளை	,,		5	0	0
,, R. கோவிந்தராசன்	,,	வழியாக வரவு	6	0	0
,, V. அழகர்சாமி நாயடு	,,	(ரூ. 5-ல் முதல் தவணை)	1	0	0
,, அ. பொன்னணணுக்களத்தில்வென்ருர்			3	0	0
,, பொ. கோவிந்தராசன்	,,		1	0	0
,, கு. தங்கவேல்	,,		1	0	0

உ

மறைமலையடிகளது

'அறிவுரைக் கொத்து'க்கு ஆதரவு.

14—8—1935 மாலை மணி, 5.

நிகழும் பவ, ஆடி, 30-ஆம் நாள் (14—8—35) மாலை மணி 5க்கு, கரந்தைத் தமிழ்ச்சங்கக்கல்லூரி மண்டபத்தில் தஞ்சையரசர் அறநிலயங்களின் புரவலர், திருவாளர். J. M. சோமசுந்தரம் பிள்ளை B.A., B L., அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் கூடியது. அதுபோது கரந்தைத் தமிழ்ச் சங்கத்தலைவர், செந்தமிழ்ப்புரவலர் இராவ்சாகிபு, த. வே. உமாமகேசுவரம்பிள்ளை யவர்கள் B.A., B L., கீழ்க்கண்ட முடிபுகளை விளக்கி முன்மொழிந்தார்கள். அம்முடிபுகளாவன:—

"சென்னைப் பல்கலைக் கழகத்தார் நடத்தரத்தேர்விற்கு (Intermediate Examination) உரிய தமிழ்ப்பாட புத்தகங்களுள், மறைமலையடிகளார் இயற்றிய "அறிவுரைக்கொத்து" என்னும் உரை நூலையும் ஒன்றாக நியமித்தமையால் தமிழுலகின் நன்மதிப்பில் உயர்ந்தனர்".

"உயர்தனிச் செம்மொழியாகிய தமிழ்மொழியின் சிறப்பானது அயல்மொழிப் பற்றுடைய சிலர் இழைத்து வரும் தீய முறைகளால் குலையாது பாதுகாக்கப்படும்பொருட்டு, மறைமலையடிகளார் எழுதிய "தமிழிற் பிறமொழிக்கலப்பு", "தனித் தமிழ் மாட்சி" என்னும் கட்டுரைகள் தமிழ்மாணவர் பல்காலும் பயலுதற்குரியன".

"தமிழ் நாட்டவர் உலகியலில் முன்னேற்றமடைதற்குரிய வழிதுறைகளை நடுநின்று ஆய்ந்த மறைமலை அடிகளார் தமது முடிபுகளைத் தெள்ளிதின் விளக்கி கல்வியின் சிறந்த நோக்கங்களைக் கருதாது, பிழைப்புக்கு வழியெனவே கருதி நம்மவர் கற்பது, மதியுடைமை யன்றெனவும் நம்மவர் அனைவரும் ஒருமைப்பாட்டுடன் நாட்டு நலத்திற்குரிய தொண்டுகளைப் புரியாது நம்மில் பிளவுகளை விளைத்துவரும் சாதி, சமய, ஒழுக்க வேற்றுமைகளைவலியுறுத்துவதும், பொதுநலம் பேணுதலையொழித்து தன்னல நாட்டம் கொள்ளுவதும் தேச முன்னேற்றத்திற்கு ஏலாதன எனவும், காரணகாரிய முறையாலும் மெய்ச்சான்றுகளாலும் மறைமலை அடிகளார் எழுதிய 'தமிழ்நாட்டவரும்மேல் நாட்டவரும்' எனுங் கட்டுரையும் மாணவர் பயில வேண்டுதற்குரியது."

"இக் கூறிய கட்டுரைகளடங்கிய அறிவுரைக் கொத்து என்னும் நூலைச் சென்னைப் பல்கலைக் கழகத்தினர், மேதக்க தமிழ்ப்புலமை மிக்கோர் குழுமிய (Board of Studies) கல்விக் கழகத்தினராதிய குழுவினர் ஆய்ந்து தெளிந்தமுடிபை, குறுகிய மனப்பான்மையுடைய ஒருசிலர் செய்யும் கிளர்ச்சி காரணமாக மாற்றத் துணிவது அடாத செயலாகும்".

அவற்றை தஞ்சைக் கிழவாயில் வழக்கறிஞர், திரு. வே. அழகர்சாமி நாயடு அவர்கள் B. A., B. L., துணைமொழிதலாகப்

பின்பற்றிப் பேசினார்கள். பின்னர் அவற்றையொட்டி, தஞ்சை தூய பேதுரு உயர்தரக் கல்லூரித் தமிழாசிரியர், திரு. பா. சிவகுருநாதபிள்ளையவர்களும், கரந்தைத் தமிழ்ச் சங்கக்கல்லூரித் தலைமை யாசிரியர், திரு. சிவ. குப்புசாமியவர்களும், கரந்தைத் தமிழ்ச் சங்கப் புலவர், திரு. பொன்னண்ணு களத்தில் வென்றார் அவர்களும், திருவையாற்று அரசர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், திருவாளர். R. வேங்கடாசலம் பிள்ளையவர்களும், "அறிவுரைக் கொத்தைப் பாடமாக வைப்பது மிகவும் பொருத்தமுடைத்து" என்பதுபற்றி விரிவாகப் பேசி ஆதரவு தந்தனர்.

பின்னர் இம்முடிபுகள் யாவும் அவையோர் அனைவரின் ஒத்தவுள்ளத்துடன் நிறைவேறின.

நமது தமிழ்ப் பெருந்தொண்டர் :—நம்சங்கத்துப் பேரன்பர். திருவாளர். செங்கரையூர். அ. பொன்னண்ணுக்களத்தில்வென்றார் அவர்கள், மேலைத்தஞ்சை, நாட்டாண்மைக்கழக உயர்தரப் பள்ளித்தமிழாசிரியர் பதவியினின்றும்விலகி, யுவ சித்திரைமுதல் ஓய்வு பெற்றும், நம் சங்கத்தின்பாற்கொண்ட பெருவிருப்பால், யுவ-ஆனி முதல் நம் சங்கக்கல்லூரியில் தமிழ்ப் பணியாற்றியும், தமிழ்வித்துவானுதற்குரிய மாணவர்களை ஆவணிமுதல் பயிற்றியும் தமிழ்த்தொண்டு புரிவதை மிக்க மகிழ்ச்சியுடன் தமிழுலகிற்கு அறிவிக்கின்றோம். திரு. பொன்னண்ணுபோன்று ஒவ்வொரு தமிழ்ப்புலவரும் ஊதியங்கருதாது ஓய்வுற்ற போதெல்லாம் தமிழ்ப் பணியாற்றுவதையே தங்கள் பொழுது போக்காகவும், கடமையாகவும் கொள்ளுவார்களாயின், தனித் தமிழ் நூல்கள் பல்லாயிரக் கணக்கில் பல்கி, பலகோடி நூறுயிரம் தமிழ் மக்களைத் தமிழ் உணர்ச்சிபெற்றவர்களாக்கி, தமிழ்நாடே யாவற்றினும் தலைமையுற்ற நாடு என்ற புகழையும் உலகிற்குக் காட்டும் என்பது திண்ணம்.